
பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று




**சந்தா விபரம்.**

| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... .... .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... .... .... | 1–12 |
| வெளிநாடுகளுக்கு வருட சந்தா | 4—0 |

ஆதி திராவிட சங்கங்களுக்கு பாதி சந்தா வுக்கு அனுப்பபபடும்.

*முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப் படமாட்டாது.*

# [வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

**ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.**

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ. |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |


நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத் தியேக விகிதம்.

*முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.*

*பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா*
*செய் தொழில் வேற்றுமையான்—குறள்.*

*ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க*
*மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.*

மாலை க | குரோதன-வூ கார்த்திகை-மீ உ அ௳ (13—12—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் ௩உ



மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

(3-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

ஓர் தீர்மானத்தை ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடுவைக்கொண்டு பிரேரேபிக்கச்செய்து இத்தீர்மானத்திற்கு என்ன சொல்லுகின்றீர்களென ஸ்ரீமான். நாயக்கரைக் கேட்டாரா? இல்லையா?

16. ஸ்ரீமான். நாயக்கர் தனது தீர்மானம் எழுதிக்கொண்டிருக்கிறது, இதைத்தான் வோட்டுக்கு விடவேண்டும் என அக்ராசனராகிய ஸ்ரீமான். முதலியாரைக் கேட்டுக் கொண்டாரா? இல்லையா?

17. பிராமணரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானம் எழுதி, ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையால், ஸ்ரீமான். முதலியாரிடம் கொடுக்கப்பட்டவுடன், இது ஒழுங்குத்தவறானதென்று ஒரேயடியாய் அடித்துவிட்டாரா? இல்லையா?

18. வகுப்புவாரி தீர்மானத்தை ராஜீய மகாநாட்டில் பிரேரேபிக்க, ஸ்ரீமான். ராமநாதன் அனுமதி கேட்டதற்கு, ஸ்ரீமான். முதலியார் அனுமதியளித்தாரா? இல்லையா?

19. ஷை தீர்மானத்தை நகல் தீர்மானங்களோடு அச்சடித்து, பிரேரேபிப்பவர் ஸ்ரீமான். எஸ். இராமநாதனென்றும், ஆமோதிப்பவர் ஸ்ரீமான். இராமசாமி நாயக்கரென்றும் குறிக்கப்பட்டதா? இல்லையா?

20. இப்படியிருக்க, மகா நாட்டின் விஷயாலோசனைக்கமிட்டியிலோ, மகா நாட்டிலோ, ஒருவரும் முறைப்படி தீர்மானங்களைக்கொண்டு வரவில்லையென்று நவசக்தியில் ஸ்ரீமான். முதலியார் எழுதியிருப்பது, உண்மை முதலியாரின் கூற்றா? அல்லது போலி முதலியாரின் கூற்றா?

## மகாநாட்டு நடபடிக்கைகள்.

21. மகாநாட்டில் இரண்டாவது தீர்மானமாக, ஸ்தலஸ்தாபனங்களைக் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும் என்ற தத்துவத்தோடு கொண்டுவந்திருந்ததைப் பிரேரேபிக்க, ஆதரிக்க, ஆமோதிக்க மூன்று கனவான்கள் பெயர் குறிப்பிட்டிருந்ததா? இல்லையா?,

22. அந்தப்படிச் செய்யாமல், அக்ராசனாதிபதி தானே எழுந்து அவசரவசரமாய்ப் பிரேரேபித்து நிறைவேறிவிட்டதென்று சொன்னாரா? இல்லையா.?

23. இதற்குக்காரணம் ஸ்ரீ மா ன். இராமசாமி நாயக்கர், பின்னால் தண்ணீர் சாப்பிட்டுக் கொண்டிருந்ததும், அவர் வந்தால் ஆக்ஷேபிப்பார் என்கிற பயந்தானா? அல்லவா?. அல்லாமலும், அவர் வந்ததும், ஸ்ரீமான். முதலியாருட்பட யாவரும் சிரித்தார்களா? இல்லையா?.

24. பாட்னா தீர்மானம் பாஸான பிறகு, ஸ்ரீமான். இராமசாமி நாயக்கரை, ஸ்ரீமான். முதலியார் கூப்பிட்டு, உங்கள் தீர்மானம் ஒரு சமயம் தோற்றாலும், தோற்றுப் போகும்போல் இருக்கிறது. ஆதலால் வாபீஸ் வாங்கிக்கொள்ளுங்கள், என்று சொன்னாரா? இல்லையா?,

25. ஸ்ரீமான். இராமசாமி நாயக்கர் தன்னுடைய தீர்மானம் தோற்காதென்றும், தோற்றுவிட்டாலும் அதைப்பற்றிக் கவலையில்லையென்றும் சொல்லிவிட்டாரா? இல்லையா?

26. பிறகு கொஞ்சநேரம் பொறுத்து காங்கிஸ் விதிப்படி இருபத்தைந்து பிரதிநிதிகளின் கையெழுத்திருந்தால்த்தான், பிரேரேபிக்கலாமென்று ஸ்ரீமான். இராமநாதனிடம் சொன்னாரா? இல்லையா?

27. இதற்குக் காரணம், 25 கையெழுத்து வாங்குவதற்குள்ளாக மகாநாட்டு மற்றத் தீர்மானங்களையெல்லாம் தானே பிரேரேபித்து அவசரவசரமாய்த் தீர்மானித்து, மகாநாட்டு நடபடிக்கைகளை முடித்து அத்தீர்மானம் மகாநாட்டுக்கு வரவொட்டாதபடி செய்ய வேண்டுமென்ற எண்ணந்தானா? இல்லையா?

28. அப்படி இருந்தும், கல்பாத்தி தீர்மானத்தின் பேரில், ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் சிநேகிதர்கள் சிலர் பேசக் கேட்டுக்கொண்டதால், அவர்களுக்குப் பேச அநுமதி கொடுத்ததால், மத்தியில் கிடைத்த கொஞ்சநேரத்தில் சுமார் 30 பிரதிநிதிகளுக்குமேல் ஸ்ரீமான். நாயக்கரால் தீர்மானத்துக்குக் கையெழுத்து வாங்கிக்கொடுக்கப்பட்டதா? இல்லையா?

29. இது கேட்டதும், கொடுத்ததும், கையெழுத்து வாங்கினதும், பாட்னாத்தீர்மானத்தை ஒப்புக்கொண்டு காங்கிரஸ் சட்டசபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் பின்வாங்கிக்கொண்டதற்குப் பிறகுதானா? அல்லவா?

இவற்றிற்கு ஸ்ரீமான். முதலியாரவர்கள் தமது மனச்சாக்ஷி வாதத்தில் என்ன பதில் சொல்லியிருக்கிறார்? அல்லது என்னதான் சொல்லப்போகிறார்? மனச்சாக்ஷிக்கு ஓர் அளவுண்டா? இல்லையா?. திருடவும், கொலைசெய்யவும், கொள்ளையடிக்கவும், ஒரு மனிதனுக்கு அவனுடைய மனச்சாட்சி இடங்கொடுத்துவிட்டால், உலகத்தார் வாய்மூடிக்கொண்டிருக்க வேண்டியதுதானா? உலகத்தாருடைய மனச்சாட்சி இவ்விதக் காரியங்களை வெளிப்படுத்தக் கட்டளையிட்டால், அவர்கள் மனச்சாட்சிக்கு மரியாதை யுண்டா? இல்லையா? மனச்சாட்சி யென்றால், ஒருவர் மனச்சாட்சியில் மற்றொருவர் எப்படிப் பிரவேசிக்கலாம்? குடி அரசின் மனச்சாட்சியில் ஏன் ஸ்ரீமான் முதலியார் பிரவேசித்துப் பின்வாங்கிக்கொள்ளும்படி கட்டளையிடுகிறார். ஸ்ரீமான். உண்மை முதலியாருடைய மனச்சாக்ஷியைக் குடி அரசும், அதன் பத்திராதிபரும் நன்கு அறிவார்கள். அது மிகவும் பரிசுத்தமான மனச்சாக்ஷி. காஞ்சீபுரம் மகாநாட்டு நடபடிக்கைகள் கண்டிப்பாய் ஸ்ரீமான். உண்மை முதலியாரின் மனச்சாக்ஷி அல்லவே அல்ல. ஸ்ரீமான்கள். அய்யங்கார், ஆச்சாரியாரின் மனச்சாக்ஷிகள், ஸ்ரீமான். முதலியாரின் சரீரத்திற்குள் புகுந்து, ஸ்ரீமான். முதலியாரின் மனச்சாக்ஷியை அடித்துத்துரத்தி, அந்த ஸ்தானங்களை ஆக்ரமித்துக்கொண்டு, அவைகள் நடத்தின நடபடிக்கைகள் தானென்பதை குடி அரசும், அதன் பத்திராதிபரும், மற்றும் அதன் நண்பர்களும் கோபுரத்தின் மீதிருந்து கூவவும் அஞ்சமாட்டார்கள்.

காஞ்சீபுரம் மகா நாட்டில் ஸ்ரீமான். போலி முதலியார் கண்ணுக்கு ஸ்ரீமான்கள். இராமசாமி நாயக்கரும், இராமநாதனும், தண்டபாணி பிள்ளையும் ஓர் சிறிய மூட்டைப் பூச்சிபோல் விளங்கினார்களென்பதையும், அவர்களை மனிதர்களாகக்கூட மதிக்கவில்லை என்பதையும் அவர் மறுக்கவே முடியாது. ஆனால், ஸ்ரீமான்கள். ராஜகோபாலாச்சாரியாரும், ஸ்ரீனிவாசய்யங்காரும், போலிமுதலியார் கண்ணுக்குக் குலகுருவாய் விளங்கினார்களென்பதையும், அவர்மறுக்கவே முடியாது. உண்மை முதலியார் உள்ளத்தில் ஸ்ரீமான்கள். இராமநாதனும், தண்டபாணி பிள்ளையும், நாயக்கரும் எப்படி விளங்குகின்றார்களென்பதும், ஸ்ரீமான்கள். ஸ்ரீனிவாசய்யங்காரும், இராஜகோபாலாச்சாரியாரும் எப்படி விளங்குகின்றார்களென்பதும், உண்மை முதலியாருக்கும், அவருடைய அன்பர்களுக்கும் நன்றாய்த் தெரியும். ஸ்ரீமான். முதலியாரின் தியாகமும், அவருடைய தேசபக்தியும், அவரது உழைப்பும், தமிழ்மக்கள் வெகுபேர் அறியமாட்டார்கள். சாதாரண மக்களுக்கு ஏதோ அவர் ஓர் தமிழ் படித்தவனென்றுமாத்திரம் தான் தெரியும். வாஸ்தவத்திலேயே ஸ்ரீமான். முதலியார். ராஜீய வாழ்வில் இறங்காமல் தனது தமிழ் உபாத்தியாயர் உத்தியோகத்திலேயே இருந்திருப்பாரானால், இதுவரையில் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் சம்பாதித்திருப்பாரென்பதோடு, மஹாமஹோபாத்தியாய பட்டங்களும், மற்றும் தமிழ் அகராதி எழுதுவதற்கும், தமிழ்ப் பிள்ளைகளைப் பரீட்சித்து அவர்கள் பிராமண பரீக்ஷகர்கள் கையில் சிக்கி பரீக்ஷையில் தவறிப்போகாமல் விருத்தியடைவதற்கும், அரசாங்கத்தில் தமிழுக்குத் தக்க யோக்கியதை சம்பாதிப்பதற்கும் உதவியாயிருந்திருப்பார். இராவணன் தங்கையாகிய சூர்ப்பனகையை மூக்கையும், முலையையும் அறுத்த ராமன், உத்தமன்-விஷ்ணு அவதாரம் என்றும், அதற்குப் பிரதியாய் சீதையைக் கொண்டுபோய் அசோகவனத்தில் வைத்து தன் மகளைக் காவல் போட்டு வைத்திருந்தவன் இராக்ஷஸன் என்றும், காலில்லாதவன் நொண்டி, கண்ணில்லாதவன் குருடன் என்றும், இருக்கிற புஸ்தகப் பள்ளிக்கூடப்பாடங்களை எழுதிக்கொண்டிருந்தால், அளவிட முடியாத பணத்தையும் சம்பாதித்திருப்பார். உண்மையில் தமிழ் நாட்டு ராஜீய வாழ்விலிருக்கும் எவருடைய தியாகத்திற்கும், ஸ்ரீமான். முதலியார் தியாகம் பின் வாங்கியது அல்ல என்றுதான் சொல்லவேண்டும். அவர் தன்னைப்பற்றி விளம்பரப்படுத்திக் கொள்ளுங்குணம் கொஞ்சமும் இல்லாதவரானபடியால், அவருடைய தியாகங்களைப் பொதுமக்கள் அறிய வழியில்லாமற் போய்விட்டது. அதுமாத்திரமல்ல, அவரிடத்தில் அந்நியரை மன்னிக்கும் குணம் தமிழ்

(தொடர்ச்சி 9-வது பக்கம் பார்க்க.)

# காஞ்சிமகாநாட்டுத் தலைவர்.

காஞ்சிமகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான். திரு. வி. கலியாணசுந்தர முதலியார், தமது "நவசக்தி" பத்திரிக்கையில், "மகா நாட்டுத்தலைவர் ஐயங்கார், ஆச்சாரியார் கைப்பிள்ளையாக நடந்தார் என்னும் உரைகளை, 'குடி அரசு' பத்திரிகை திரும்ப வாங்கிக்கொள்வது அதன் பெருந்தகைமையைக் காப்பதாகும், ஒருவர் தன்து மனச்சான்றுப்படி நடந்ததை மற்றொருவர் திரித்துத்தம் மனம் போனவாறு கூறுவது அறமாகா. "குடி அரசு" ஆசிரியர் பால் எமக்கு நிரம்பிய அன்பு உண்டு. அவ்வன்பு காரணமாகவே இவ்வாறு எழுதத்துணிந்தோம்" என்று எழுதியிருக்கிறார்.

ஆனால் குடி அரசு அதன் பெருந்தன்மையைக் காப்பாற்றிக்கொள்வதிலோ, சிறுந்தன்மை அடையாதிருப்பதிலோ கருத்துவைத்து அது தமிழ் நாட்டில் உலாவவில்லை. பெருந்தன்மையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், அனேக சிறுந்தன்மைக் காரியம் செய்யவேண்டுமென்பது அதற்குத்தெரியும். பெருந்தன்மை வந்தாலும் சரி; சிறுந்தன்மை வந்தாலும் சரி; அல்லது குடி அரசே மறைந்து போவதாயிருந்தாலும் சரி; உண்மையை—தன்மனதுக்கு உண்மை என்றுபட்டதை—எடுத்துச் சொல்லுவது தான் அதன் தொண்டாக உடையது என்பதை நவசக்தியும் அதன் ஆசிரியரும் உணரட்டும்.

அல்லாமலும், இது உண்மைக் கலியாணசுந்தர முதலியார் எழுதியிருப்பாராயின், நிபந்தனையில்லாத மன்னிப்புக் கேட்டுக்கொண்டு எழுதியவைகளைப் பின்வாங்கிக்கொள்ள வேண்டியது உண்மையை உத்தேசித்து குடி அரசின் கடமையா என்றுவது யோசிக்கும். ஆனால், தமிழ் நாட்டை ஏமாற்றி பிராமணர்களுக்குத் தலையையும், பிராமணரல்லாதாருக்கு வாலையும் காட்டும் போலிக்கல்யாணசுந்திர முதலியார் எழுதியதைக் "குடி அரசு" எப்படி ஏற்கும்? போலிக் கலியாணசுந்திர முதலியாரின் அரசியல் நடபடிக்கைகளைத் திராசின் ஒரு தட்டில் வைத்துக் "குடி அரசு" "தமிழ் நாடு" "ஸைபுல் இஸ்லாம்" "சுகோதயம்" "ஸ்வராஜ்யா" "லோகோபகாரி" "ஊழியன்" "நவ இந்தியா" "தீனபந்து" "வஞ்சிகேசரி" முதலிய பத்திரிக்கைகள் எழுதியிருப்பவைகளையும் மற்றொரு தட்டில் வைத்தால், ஸ்ரீமான். போலிக் கலியாணசுந்தரமுதலியாரின் தட்டு நிலத்தை விட்டுக் கொஞ்சங்கூட அசையாது என்பதோடு, ஸ்ரீமான். முதலியாரின் நடத்தைக்கு குடி அரசு முதலியவைகளெழுதியது ஆயிரத்திலொரு பங்குகூட நிகராகாது என்பது விளங்கும். ஸ்ரீமான். முதலியாரவர்களுக்கு மனச்சாக்ஷியென்னும் பேரால், தாம் நடந்து கொண்ட காரியத்தை மறுபடியும் நினைப்பு மூட்டுகிறோம். இதுதானா ஸ்ரீமான். முதலியாரின் மனச்சாக்ஷியென்பதை மற்றொரு முறையும் ஸ்ரீமான் முதலியாரைச் சிந்தித்துப் பார்க்கும்படி தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கிறோம். இதனால் அவருக்கு உண்மை கிடைக்காவிட்டால், தமிழ் நாட்டிலுள்ள ஏதாவதொரு ஐந்து பத்திராதிபர்களைப் பஞ்சாயத்தாராக நியமித்து, அவர்களைக் கொண்டு சொல்லப்படும் முடிவுக்கு ஸ்ரீமான். உண்மைக்கலியாணசுந்தர முதலியார் தயாராயிருக்கிறாரா வென்று கேட்கிறோம். பஞ்சாயத்தார் சொல்லும் முடிவுக்கு "குடி அரசு" கட்டுப்படத்தயாராயிருக்கின்றதென்று இதனால் உறுதிகூறுகிறது. அன்றியும் ஸ்ரீமான். முதலியாரவர்களை "குடிஅரசின்" நடத்தைக்காகச் சர்க்கார் நியாயஸ்தலத்திற்குப் போகும்படி ஒரு நண்பர் அவருக்கு யோசனை சொன்னாராம். அப்படியானாலும், தனது நடபடிக்கையை, நியாயமான தாக்கிக்கொண்டாலுங்கூட சம்மதமே. குடி அரசுக்காவது, அதன் பத்திராதிபருக்காவது நவசக்தியிடமோ, அதன் பத்திராதிபரான ஸ்ரீமான். முதலியாரிடமோ எவ்வித துவேஷமோ, பகைமையோ இல்லையென்பதையும் "குடிஅரசும்" அதன் பத்திராதிபரும் உறுதிகூறுகிறார்கள். நிற்க, காஞ்சியில் கூடின பிராமணரல்லாதார் மகா நாட்டிற்கு, ஸ்ரீமான் முதலியாரவர்கள் வரவேயில்லை. ஸ்ரீமான். டாக்டர். வரதராஜுலு நாயுடு வந்திருந்தார். டாக்டர். வரதராஜுலு நாயுடுவை ஸ்ரீமான். நாயக்கர் மகாநாட்டுக்கு வரும்படி அழைத்தபோது, தான் வருவதில் ஆக்ஷேபனையில்லையென்றும், ஸ்ரீமான். முதலியார் வருவதில்லையெனச் சொல்லிவிட்டாரென்றும் சொன்னார். உடனே ஸ்ரீமான். முதலியாரை, ஸ்ரீமான். நாயக்கர் கேட்டபோது, ஸ்ரீமான். முதலியார் தாம் அப்படி ஒருக்காலும் சொல்லவேயில்லையென்றும், ஸ்ரீமான். நாயுடு வேண்டுமென்றே சொல்லி நம்மிருவருக்கும் கலகத்தை உண்டாக்கப்பார்க்கின்றாரென்றும், மற்றும் சில விஷயங்களும் சொன்னதோடு, தான் வருவதாகவும் ஒப்புக்கொண்டார். அப்படியிருக்க, பிராமணரல்லாதார் மகாநாட்டிற்கே ஸ்ரீமான். முதலியார் வராத காரணமென்ன? அதன் நடபடிக்கைகளைக் கூடத்தமது பத்திரிக்கையில் நடுநிலைமையுடன் பிரசுரிக்காமல், சுதேசமித்திரனைவிட மோசமான நிலைமையில் பிரசுரிக்கக் காரணமென்ன? அல்லாமல், "ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையின் கடுமையான மொழிப்பிரயோகத்தால் கூட்டத்தில் குழப்பமும், கூச்சலும் ஏற்பட்டு கூட்டம் கலைக்கப்பட்டது" என்று விஷம நிரூபம் எழுதக் காரணமென்ன? கூட்டத்திற்கு வந்திருந்தவர்களுடைய பெயரை ஏன் குறிப்பிட்டிருக்கக்கூடாது? அன்றி, மகாநாட்டின் விஷயாலோசனைக் கமிட்டியிலோ, மகா நாட்டிலோ ஒருவரும் முறைப்படி பிராமணரல்லாதார் மகா நாட்டுத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லையென்றும், அவை மகா நாட்டில் ஆலோசனைக்கே கொண்டுவரவில்லையென்றும், நவசக்தியில் எழுதியிருப்பது உண்மை முதலியாரின் நடபடிக்கையா? அல்லது போலி முதலியாரின் நடவடிக்கையா? நிற்க, பிராமணரல்லாதார் மகா நாட்டுத்தீர்மானங்களை மகா நாடு முடிந்தவுடன் விஷயாலோசனைக் கமிட்டியில்,

1. தலைவர் ஸ்ரீமான். முதலியாரிடம் ஸ்ரீமான். நாயக்கர் கொடுத்தாரா? இல்லையா?

2. ஸ்ரீமான். பாவலர் அதைப் பிரேரேபித்தாரா? இல்லையா?

3. ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளை அதை ஆதரித்தாரா? இல்லையா?

4. ஸ்ரீமான். நாயக்கரை ஸ்ரீமான் முதலியார், இரண்டு தீர்மானங்களிருக்கிறதே, உங்களுடைய அபிப்பிராய மென்னவென்று கேட்டாரா? இல்லையா?

5. ஸ்ரீமான். நாயக்கர் எழுந்து பிராமணரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானம், நானும் இருந்து செய்ததாதலால் அதற்கு மாறாக இப்பொழுது நான் பேசமுடியாது; ஆகையினால் எந்தத்தீர்மானத்துக்கானாலும், வோட்டுக் கேளுங்கள் என்று, ஸ்ரீமான். நாயக்கர் சொன்னாரா? இல்லையா?

6. அதன் மேல் ஸ்ரீமா[ன்]. எஸ். இராமநாதன் தீர்மானம் வோட்டிக்கு விடப்பட்டுத் தோற்றுப்போயிற்றா? இல்லையா?

7. அதுதோற்றவுடன், உடனே ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார், ஸ்ரீமான் பாவலரை அவர் பிரேரேபித்த தீர்மானத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி சொன்னாரா? இல்லையா?

8. ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளை எழுந்து, ஸ்ரீமான். பாவலர் தீர்மானத்தைப்பின் வாங்கிக்கொள்ளுவதாய்ச் சொன்னாலும், தான் அதை ஒப்புக்கொள்வதில்லையென்று வலியுறுத்தினாரா? இல்லையா?

9. பிறகு ஸ்ரீமான். முதலியார் வாபீஸ் வாங்கிக்கொள்ள அநுமதியளித்துவிட்டதாகச் சொன்னாரா? இல்லையா?

10. அந்த அநுமதியை ஸ்ரீமான். நாயக்கர் ஒப்புக்கொள்ளாமல் வாதாடியதில், மறுபடியும் கொண்டுவர ஸ்ரீமான். முதலியார் அநுமதி கொடுத்தாரா? இல்லையா?

11. ஸ்ரீமான். நாயக்கரை மறுபடியும் பிரேரேபிக்கும்போது, எழுத்து மூலியமாய்க் கொடுங்கள் என்று கேட்டாரா? இல்லையா?

12. ஸ்ரீமான். நாயக்கர் முன்னமே உங்கள் கையில் கொடுத்திருக்கிறதே, அதை நீங்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களேயென்று சொன்னாரா? இல்லையா?

13. அது சமயம் ஸ்ரீமான். முதலியார் கையில் அத்தீர்மானங்கள் இருந்ததா? இல்லையா?

14. தமது கையில் அத்தீர்மானங்களிருந்தும், அதை ஏற்றுக்கொள்ளமாட்டேன், வேறு எழுதிக்கொண்டு வாருங்கள் என ஸ்ரீமான். முதலியார் சொன்னாரா? இல்லையா?

15. ஸ்ரீமான். நாயக்கரும், ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையும் பிராமணரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானத்தை எழுதிக்கொண்டிருக்கும்போது தேர்தலுக்காக ஓர் போர்டு நியமிக்க வேண்டும் என்கிற

(தொடர்ச்சி 2-வது பக்கம் பார்க்க)

## ஸ்ரீமான். வி. கலியாணசுந்திர முதலியாரவர்களின், "சொல்லும், செயலும்"

ஸ்ரீமான் முதலியார் அவர்களிடத்தில், எல்லோர்க்கும் விசேட மதிப்புண்டு. ஏனெனின், அவரை எவ்வாற்ருனும் பிறர் குறை கூற இயலாதபடி நடந்துகொள்ளும் நடையை நன்கறிந்தவர். அந்நடை தமிழ்பண்டிதர் கூட்டத்திற்கே உரித்தானது. ஒரு சொல்லைக்கொண்டே "போற்றினும் போற்றுவர், தூற்றினும் தூற்றுவர்" என்னும் பழமொழியே சாலும். தமிழ்நாட்டில் சாதிச்சண்டைகளும், சமயச்சண்டைகளும், ஓங்கி வருதல் கண்டு மனம்பொருது அவைகளைப்போக்கி அனைவரும் ஒருங்கு கூடி உரிமைப்போர் நிகழ்த்தவேண்டுமென்று அடிக்கடி எழுதியும், பேசியும், வந்திருக்கின்ருர். அப்படி ஒற்றுமைப்படுத்துவதில் அவருக்கு அந்தரங்க சுத்தியாக மிகுந்தகவலை இருந்தது. அது காரணம் பற்றியே, எவ்வளவோ சூழ்ச்சிகளுக்கிடையே தமிழ்நாடு காஞ்சீபுரம் மகாநாட்டுக்கு அவரைத்தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அவர் தலைமைகாணும் கூட்டத்தில், பல்வேறு கட்சி வேற்றுமைகளை ஒழிக்கவும் காங்கிரஸ் கூட்டத்தாருக்குள் இருக்கிற மனக்கசப்பை போக்கவும் ஓர் வழி திறக்கப்படுமென்று பலரும் நம்பிக்கை பூண்டிருந்தார்கள்; ஆனால் அந்நம்பிக்கை முழுவதும் எதிர்பாராதவளவிற்கு மோசமாய் போகுமென்று யாரும் கனவிலும் நினைத்தவர்களல்லர். ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய தலைமைப்பதவியினின்றும் கிடைத்த ஒவ்வொரு தீர்ப்புகளையும் நினைக்கும்போது என்மனது ஓர்வித சந்தேகத்தை அகற்றியது. உரிமையற்ற நாட்டு மக்கள் கூட்டத்தின் தலைமை பதவியே, ஒருவர் மனதை இவ்வளவு மாற்று மென்ருல், சர்வ வல்லமையுள்ள சர்க்காரின் தலைவராகிறவர்களுடைய மனது இதைவிட ஒரு நூறு மடங்கு அக்கிரமங்கட்கு இடங்கொடுக்குமென்பதில், என்ன தடை? ஸ்ரீமான் திரு. முதலியாரவர்கள் விஷய ஆலோசனைக்கமிட்டியில் கொடுத்த (வெளியில்சொல்லமுடியாத) பல திறப்பட்ட தீர்ப்புகள் இரண்டாம் நாட் கூட்டத்தில், முதல் தீர்மானத்தின் இரண்டாவது பகுதியைப்பற்றி, நடந்த விவாதத்தின்போது நடந்து கொண்ட, யதேச்சாதிகாரமானதும், மோசக்கருத்தானதுமானசெய்கைகள், இரண்டாவது தீர்மானத்தை வெகு விரைவாக வாதித்துத்தந்திரமாய் நிறைவேற்றியது. கல்பாத்தி விஷயமாக நடந்த விவாதத்தின்போது, நாட்டிற்குழைத்து சிறைக்கோட்டம் நண்ணிய பலரைப் பேசவிடாமல் தடுத்ததுமன்றி அன்னிய ஆடைபூண்டு விபூஷணுழ்வாரைப்போன்ற சமயசஞ்சீவியான ராவ்பகதூர் ஒ. கந்தசாமி செட்டியாரை பேச அழைத்தது முதலிய இன்னுமனேக சிறிதும் பொருத்தமற்ற செயல்களை எல்லாம் ஏதோ "தமிழ்நாடு" எழுதுகிறபடி தலைவர் என்கிற முறையில் சமயோஜிதம் போல் நடந்து கொண்டாரென்று ஒதுக்கி விட்டாலும், அவர் பன்னாள் சிரமப்பட்டு எழுதிய, முகவுரைபிரசங்கத்தில் "மனம்" "மெய்" களறிய மொழிந்த உரைப்படி ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவாகள், கொணர்ந்த வகுப்புவாரிப்பிரதிநிதித்துவத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டியது கடமை. அவரது முகவுரை பிரசங்கத்திலுள்ள நாட்டுப்படலத்தையடுத்த, ராஜீயக்காதையில், வகுப்பு பிணக்கென்ற அத்தியாயத்தில்:—

"நாட்டு நலனேடு வகுப்பு நலத்தையும் நாடிப் பிணக்கின்றி உழைக்கவுங்கூடும்"

"வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவமோ, எதுவோ எல்லாக் கணக்குகளையும், காங்கிரஸுக்குள்ளே முட்டி மோதிக்கொள்ள வேண்டுமேயன்றிக் காங்கிரஸை விடுத்து அப்பிணக்குகளைப்போக்க, மற்றவிடம் நண்ணல் வினையை விலக்கு வாங்குவதாக முடியும்" எனக்கழறி இருக்கின்ருர். ஆதலால், இவருக்கு முதலில் நல்லெண்ணம் இருந்ததாகவே தெரிகிறது. இந்து சமூகத்தாருக்குள் பற்பல ஜாதியாருக்குள்ளும், பரஸ்பர நம்பிக்கையும், துவேஷமின்மையும் ஏற்படவேண்டி ராஜீய ஸ்தாபனங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவம் என்ற கொள்கையை நாட்டி ஒற்றுமைப்படுத்த, அவரது அபிப்பிராயப்படியே காங்கிரஸின் அங்கமாகிய அம்மகாநாட்டில், ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் கொணர்ந்ததைச் சில உபயோகமற்ற காரணங்களை சொல்லி நிராகரித்ததானது அவருடைய மனச்சாட்சிப்படி செய்ததல்லவென்பதும் அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார்களுடைய பேச்சைக்கொண்டே செய்ததென்பதும் விஷயத்தை நேரில் அறியாதவர்களும் கூட எளிதில் அறிந்துகொள்ளலாம். அவரது மனச்சாட்சிப்படி செய்ய, "குடியரசு" எழுதுவது போல சென்னையில் ஸ்ரீமான். சீனிவாசய்யங்காருடைய, கூட்டம் ஸ்ரீமான். சுரேந்திரநாத் ஆரியாவை அடித்துத்துன்புறுத்திய பிறகு ஏற்பட்ட மனமாறுதல் போலும். நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம், நாம் யாருக்கும் இடைவோமல்லோம், இரு நிலத்தில் எமக்கெதிராவார் யாருமில்லை; என வீர மொழி முழங்கும், முதலியாரவர்களுடையதன் மனமே, இவ்வளவு பெரிய வேறு பாடுகளுக்கு உறைவிடமாக இருந்ததென்ருல், வயிற்றுப் பிழைப்புக்காக தேசத் தொண்டாற்றிவருபவர்களின் திருவிளையாடல்களை செப்பவும் வேண்டுமோ? ஸ்ரீமான். முதலியாரவர்களிடத்தில் அகச்சான்று, புறச்சான்று, என்பது கேட்டோமானுல் இன்று முழுவதும் கேட்கலாம். அந்த தத்துவப்படி, இந்தக்காரியங்கள் புறச்சான்றுப்படி நடந்தது போலும்; போனது போகட்டும். ஸ்ரீமான் முதலியாரவர்கள் சொல்லியபடி, "வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவமோ எதுவோ காங்கிரஸுக்குள்ளே முட்டிமோதிக்கொள்ள, அவரது செயல் இடந்தரவில்லையாதலான்" மறுபடி அவரது சொல்படி, அப்பிணக்குகளைப்போக்க மற்றவிடம் நண்ணல் எப்படி? வினையை விலக்கு வாங்குவதாக முடியுமென்பது "கோகலாஷ்டமி என்பதை குலாம்ருவுத்தர் பள்ளிக்கு போகிருர்" என்கிற கதையைத்தான் ஒக்கும்.

இப்படிக்கு

அ. திருஞான சம்பந்தனர்.

---

## தேவதாசிகளுக்கு ஓர் எச்சரிக்கை.

மூவலூர், ஸ்ரீமதி. ராமாமிர்தம்மாள் எழுதுவது.

சகோதரிகளே!

எனது சொந்த அனுபவத்தை உங்களுக்கு அறிவிக்கவேண்டி இதை வரைகிறேன். நான் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவள். எனது தாயாரும், தந்தையும் நிறைந்த சாதுக்குணமுடையவர்கள். இத்தகைய சாதுக்களுக்கு நான் ஒரு பெண்ணுகப் பிறந்தேன். என்னை ஒரு வரனுக்கு மணம் செய்து வைக்க உத்தேசித்து, தமிழ் மொழியான தாய் மொழியில் மட்டும் என்னைப் பயிற்றுவித்தனர் எனது வாழ்க்கையைக் கேவலவழியில் திருப்பிய குலதுரோகிகளான என் சிறிய தகப்பனும், பெரிய தாயாரும் என் தந்தையிடம் வந்து என்னை விலைத் தொழிலுக்கு விடும்படியும், பெண் புத்திசாலியென்றும், சங்கீதமும் தெரிந்துகொண்டாளானுல், நல்ல சம்பாத்தியம் பின்னுல் கிடைக்குமென்றும், கலியாணம் செய்து கொடுக்கவேண்டாமென்றும் அடிக்கடி சொல்லி அவர்களை மதிமயங்கவைத்துப் போவார்கள். இதனுல், எனது அன்னையும், தந்தையும் என்னை சங்கீதத்திலும், நாட்டியத்திலும் பயிலவைக்க வேண்டியதாயிற்று. இத்தகைய ஆடல்களினுல் என் வாழ்க்கையின் கடை வேறு விதமாய்விட்டது. இந்த சமயங்களில் வருடம் 1-க்கு 1000 ரூபாய் சம்பாதித்து வந்தேன். இத்துடன் நில்லாமல் என் வாழ்க்கையின் ஆடம்பரத்தால், லட்சாதி பிரபு ஒருவரை நான் நத்தவேண்டியதாயிற்று. இத்தகைய நிலையிலிருந்தும் கேவல வாழ்வாகிய பொதுமக்கள் வாழ்வையும் நடத்தி வந்தேன். பாதக வாழ்க்கையால் தேடிய பொருளால் என்ன பயனடைந்தேனெனில், ஒன்றுமில்லை. ஆனுல், பெண்களை, சகோதரிகளை விலைத்தொழிலுக்கு விட்டு, சுகமாய் உண்டு கொண்டாடித் திரியும் சொந்த பந்து நண்பர்களுக்கும், நங்கைகளுக்கும் புத்தருக்கு நெய்யிட்டு சாப்பாடு போடுவதும், தீபாவளி போன்ற காலங்களில் சேலம் வேஷ்டிகளும், பெண்களுக்கு நல்ல சேலைகள் வாங்கிக் கொடுப்பதும், அவர்களால் நீ நல்ல ஜீவகாருண்ணியமுடையவளென்று புகழ் பெறுவது மட்டும் கிடைக்கும். நான் இவ்விதம் செலவு செய்ததாலும், ஆடம்பர வாழ்கை வாழ்ந்ததாலும் நானடைந்த லக்ஷாதிப் பிரபுவுக்கு 50000-ம் ரூ. கடன் ஏற்பட்டு விட்டது. என்னிடத்திலோ 5000-ம் ரூ. கூட கையிருப்பில்லை. 1910-ம் ஆண்டு என்னை யடைந்த லக்ஷாதிபதி உலக வாழ்வை நீத்து விண்ணடைய்தினர். இது சமயம் எனது வாழ்க்கை நிறைந்த இன்னலுக்குட்பட்டது. இப்படிப்பட்ட கெடுதல்கள் யாரால் விளைந்தது? என்று சிந்தித்தேன். நமது முன்னோர்கள் சரித்திரங்களை படித்து ஆராய்ந்தேன். ஓர்வித உணர்ச்சி தோன்றிற்று. ஆண்மக்கள் தங்கள் சுயநலம் பொருட்டும், தாங்கள் சுகஜீவியாயிருக்க உத்தேசித்தும் நம்மைக் கேவல வாழ்க்கையில் விட்டுக் கெடுக்கிருர்கள்.)

இந்தக் கெடுதலான வழக்கத்தைத் தடுக்க நாம், (பெண்கள்) முயலவேண்டுமென்று எனது சகோதரிகளான தேவதாசிப் பெண் மக்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதைத் தடுப்பதற்காக, 7, 8, வருட காலமாக உழைத்தும், தடுத்தும் வந்துள்ளேன். மகாத்மா அருள் வாக்கைப் பின்பற்றி, வெளிப்படையாக வந்தும் எனது சகோதரிகள் பொருட்டு தொண்டும் செய்து வருகி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

றேன். பெண்களை விபசாரத்திற்கு விட்டு அந்த வருவாயைக்கொண்டு வயிறு வளர்த்து, நாட்டுக்கும், குலத்துக்கும் துரோகிகளாய், சோம்பேறிகளாய்த் திரியும் ஆண்மக்களை இடித்தும் புத்தி கற்பித்தும் உண்மை ஆண் மக்களாக நாம் (பெண் மக்கள்) தகுந்த முயற்சி உடனே எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் உங்களைக் வேண்டிக்கொள்ளுகிறேன். பாவை நாச்சியார், ஆண்டாளம்மையார், மாணிக்கநாச்சியார், காரைக்காலம்மையார், மணிமேகலை போன்ற உத்தமத்தமிழன்னைகள் தோன்றிய தமிழ் நாட்டில் இத்தகைய சீர்கேட்டைக் காண உங்கள்மனம் வருந்தவில்லையா? ஆதலின் நமது குலப்பெண்களை உத்தமிகளாகவும் அவர்களைச் சீர்திருத்தும் விடயமாக சென்ற வருடம் ஒரு மகாநாடு கூட்டினேன். அழைப்புக் கடிதங்களை எதிர்பார்க்காமலே, பல கலியாண வீடுகளுக்கு பெண்களை விலைமகளாக்கும் குணங்களை எடுத்துரைத்து, இதுவரை அநேக பெண்களிடத்தில், இனி தங்கள் பெண்களையோ அன்றி, சகோதரிகளையோ விபசாரத்திற்கு விடுவதில்லையென்ற வாக்குறுதியும் வாங்கியிருக்கிறேன். இரண்டாவது மகாநாடும் இவ்வருடத்தில் கூட்டி தேச பக்தர்களைத் தருவித்து அவர்களைக்கொண்டு உபன்னியாசங்கள் செய்வித்து, ஆண்களுக்கும், பெண்களுக்கும் புது உணர்ச்சியை உண்டாக்கினேனென்று, சில சுயநலக்காரர்கள் சென்ற வாரத்தில் விளநகர் கலியாணத்தில் எதிர்ப்பிரசாரம் செய்தார்கள். அன்றியும், நான் குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பென்றும் என்னை சாதிக்கப்பட்டுப்பாடுசெய்வதாயும் இனி எந்த கலியாணத்திலாவது ஷை விடயத்தைப் பற்றி நான உபன்னியாசம் செய்தால் என்னை அடிப்பதாயும், சொன்னார்களாம். ஸ்ரீமான். குற்றாலம் குப்புசாமி நட்டுவனார் அவர்களிடம் எதிர்வாதமாடினது போற்றற்பாலது. எனது அருமைச் சகோதரிகளே! அந்த சுயநலக்காரர்களால் ஏமாந்து போகாதீர்கள். என்னை அடித்தால் நான் பயப்படப்போவதில்லை. "நாமார்க்குங் குடியல்லோம்; நமனையஞ்சோம்." சுயகாரியப் புலிகளின் தந்திர-இனிய வார்த்தைகளைக் கேட்டு உங்கள் அருமைப் புதல்விகளை, தமிழ்ப் பெண்களை கேவல பொதுமகள் வாழ்க்கையில் விட்டுக் கெடுக்காதிருக்கும்படி உங்களை முக்காலும் வேண்டுகிறேன்.

நீங்களிருக்கும் திக்கு நோக்கி வணங்குகிறேன். அழகிழந்து, அறிவிழந்து, குலமிழந்து, குணமிழந்து, தமிழ்ப் பெண்ணின் நடையிழந்து, கற்பிழந்து, மானமிழந்து கடவுளின் அருளுமிழந்து விலைமகளாய் வீதியிற்போவாரை நோக்கி நிற்பது தமிழ்ப் பெண்ணுக்கு அழகாகுமா? இது முறையா? அல்லது பெண்கள் தருமமாகுமா? இந்த நிலைக்கும் பெண்களை நிறுத்தி, தங்கள் வாழ்வை வெட்கமின்றி நடத்தும், ஆண் மக்களை ஆண்மக்களென்று எப்படி அழைத்தல் கூடும்? நம்மைப்போன்ற மற்ற தமிழ்ப்பெண்களும், அறிஞர்களும் நமது தொழிலை ஏளனம் செய்கின்றார்களே அதையேனும் நீங்கள் கருதவேண்டாமா? காந்தியடிகளும் "துர்ப்பாக்கிய சகோதரிகள்" என்று நம் நிலைமையை குறித்து வருந்துகின்றாரே! அந்த மகானுடைய முறையீட்டையாவது செவிமடுத்து அதன்படி நீங்கள் திருந்த வேண்டாமா? என் இன்னுயிர் குலக்குமரிகளே, நாம் ஒவ்வொருவரும்; நமது குலமகளிரை விலைமகளிராக்காமல், குலமகளிராக்கப்பாடுபட வேண்டுமென்று உங்களை மீண்டும் வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---


## சேலம் தியாகராய நிலையம், திறப்பும்; கதர்ச்சாலை திறப்பும்.

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் ஸ்ரீமான். தி. ச. கணபதி பிள்ளையால், காலஞ்சென்ற ஸர். பி. தியாகராய செட்டியாரவர்களின் ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கும், அங்கு ஸ்தாபிக்கப்பெற்ற கதர்ச் சாலைக்கும், திறப்புவிழா நடத்த ஸ்ரீமான். ஈ. வி. இராமசாமி நாயக்கர், டாக்டர். வி. நடேச முதலியார் ஆகிய இவர்களை முறையே வேண்டிக்கொண்டதற்கிணங்கி, டிசம்பர் மாதம் 5-ந்தேதி சேலத்திற்கு விஜயம் செய்தார்கள். ஸ்ரீமான்கள். நாயக்கரையும், முதலியாரையும் ஊர்வலமாய் கொண்டாட்டம் நடக்கும் ஸ்தலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது. ஸ்ரீமான்கள். டாக்டர். வரதராஜுலு, சேர்மென் வெங்கிடப்பச் செட்டியார், சடகோப முதலியார், பாகல்பட்டி இராமசாமி நாயக்கர். எஸ். பி. இராஜமாணிக்கப் பண்டாரம், கந்தசாமி பிள்ளை, இராமச்சந்திர நாயுடு முதலியோர்கள் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான். லோகநாதமுதலியார் அக்ராசனத்தின் கீழ், திறப்புவிழா தொடங்கியதும், ஸ்ரீமான்கள். நாயக்கருக்கும், முதலியாருக்கும் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தபின், ஸ்ரீமான். கணபதி பிள்ளையால் ஷை கட்டிடத்தின் விருத்தாந்தத்தைப்பற்றி ஓர் ரிப்போர்ட்டும் வாசிக்கப்பட்டது. பின்னர், ஸ்ரீமான். நாயக்கரைக் கட்டிடத்தைத் திறக்கும்படி அக்ராசனுதிபதியால் கேட்டுக் கொண்டபோது ஸ்ரீமான். நாயக்கர் பேசியதாவது:—

சிறந்த தேசபக்தரும், உண்மை சமூகத் தொண்டருமான காலஞ்சென்ற ஸ்ரீமான். தியாகராய செட்டியாரின் ஞாபகார்த்தத்திற்காக ஏற்பட்ட தியாகராய நிலயம் என்னும் கட்டிடத்தைத் திறந்து வைக்கும் பாக்கியம் நான் அடைந்ததைப் பற்றி அளவிலாத மகிழ்ச்சி எய்துகிறேன். இக்காரியத்தைச் செய்ய எனக்குக் கட்டளையிட்ட ஸ்ரீமான். கணபதியாபிள்ளையவர்களுடைய அன்பையும், விடா முயற்சியையும் நான் பாராட்டுவதோடு, அவருக்கு எனது நன்றியைச் செலுத்துகிறேன். ஸ்ரீமான். கணபதியாபிள்ளையவர்களின் குணநிசயங்களை ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடுவால் கேள்விப்பட்டிருக்கிறேன். ராஜீய விஷயத்தில் அவருக்கும், நமக்கும் அபிப்பிராயபேதமிருந்தாலும், அவருடைய அபிப்பிராயம் நமது அபிப்பிராயத்தில் குறுக்கிடுவதாயிருந்தாலும், அவரது உண்மைத் தத்துவத்தையும் ஊக்கத்தையும் நான் பாராட்டாமலிருக்க முடியாது.

ஸ்ரீமான். தியாகராய செட்டியார் தென்னாட்டுக்கே பழுத்த தேசாபிமானி. அவர் நமது சமூகத்துக்கு உண்மையாய்த் தொண்டு செய்தவர். பிராமணரல்லாதாருக்கு மறக்க முடியாத தலைவர். அவருடைய காரியங்களெல்லாம் கொஞ்சமும் சுயநலமற்றது. ராஜீய விஷயங்களில் எனக்கும் அவருக்கும் அபிப்பிராயபேதங்களிருந்தாலும், சமூக முன்னேற்றத்தில் எங்களுடைய அபிப்பிராயம் ஒன்றாகவே இருந்து வந்தது. சமூக விஷயத்தைப்பற்றியும், ராஜீய விஷயத்தைப்பற்றியும், அவருக்குள்ள அபிப்பிராயங்கள் ஓர் பெரிய தீர்க்கதரிசனமென்றேதான் சொல்லவேண்டும். சமூக விஷயத்தைப்பற்றி அவர் சொன்ன அபிப்பிராயந்தான், இன்றைய தினம் காங்கிரசிலுள்ள பிராமணரல்லாத பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ராஜீய விஷயத்தில் அவரது அபிப்பிராயங்களை இன்னமும் என்போன்றார் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், காங்கிரசில் பிரதானமானவர்களென்றும், செல்வாக்குள்ளவர்களென்றும் சொல்லப்படும் சுயராஜ்யக்கட்சியாரென்போரும் அதையே பின்பற்றுகிறார்கள். பாஷையில் ஏதாவது வித்தியாசமிருந்தாலும், தத்துவத்தில் வித்தியாசமில்லையென்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள். இந்திய பொதுஜன சேவையில் ஒரே அபிப்பிராயத்தோடு கிளம்பி தொண்டுசெய்து, அதே அபிப்பிராயத்தோடு காலஞ்சென்றவர் ஸ்ரீமான். தியாகராயசெட்டியார் என்று சொல்லுவது ஒருவிதத்திலும் மிகையாகாது. 5000, 6000 ரூபாய் சம்பளம் வரும் மந்திரி உத்தியோகம்போன்ற பெரும் பதவிகளெல்லாம், தனது காலடியில் வீழ்ந்து கிடந்த காலத்தில் தனக்கென்றாவது, தனது மக்களுக்கென்றாவது, தனது பந்துக்களுக்கென்றாவது எடுத்துக்கொள்ளமல், அந்நியர்களுக்கே அவைகளை வழங்கி வந்தார். இவ்வித சுயநலமற்ற தன்மையுடைய தலைவர் வேறு யாராவது இருக்கின்றார்களா வென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள். இவ்வளவு நேர்மையான பெரியாரை இதுவரை நான் சந்தித்துப் பேசியதில்லை யானாலும், அவருடைய மாசற்ற உள்ளத்தினிடம் எனக்கு எப்பொழுதும் பக்தி உண்டு. அப்பேர்ப்பட்ட பெரியாரின் ஞாபகார்த்தத்திற்காக ஏற்படுத்தியிருக்கும் கட்டிடத்தைத் திறந்துவைப்பதை நான் ஓர் பெரும்பாக்கியமாகவே கருதி இத்தொண்டைச் செய்கிறேன் என்றும், எனக்குக்காயலாவாய் இருப்பதால் அதிகமாகப் பேச முடியாததற்கு வருந்துகிறேனென்றும் சொல்லி வெள்ளிச்சாவியினால் கட்டிடத்தைத்திறந்து வைத்தார். பிறகு, ஸ்ரீமான். டாக்டர் நடேச முதலியார். கதர்ச்சாலையைத் திறக்கும் பொழுது பேசியதின் சுருக்கமாவது:—கதர் இந்தியாவின் பொருளாதாரநிலைமைக்கு முக்கியமானதென்றும், பண்டைக்காலத்தில் இந்தியாவில் அனேகவிதமான உயர்ந்த ஆடைகள் நெய்யப்பட்டதென்றும், இப்போது அவைகளெல்லாம் ஒழிக்கப்பட்டுப்போய் விடப்பட்டதென்றும் கைத்தறியால் நெய்யப்பட்ட துணிகள் யந்திரங்களுடன் போட்டிபோட முடியாதென்றும், அதற்கு அரசாங்கத்தார் வேண்டிய உதவி செய்து கைத்தறித்தொழிலைக் கவர்ன்மெண்டார் காப்பாற்ற வேண்டுமென்றும், அந்நிய நாடுகளின் கைத்தொழில்களெல்லாம் கவர்ன்மெண்டாரின் உதவியால்த்தான் முன்னுக்கு வந்ததென்றும், யந்திரங்களினால் துணிஉற்பத்தி செய்து அந்நிய நாட்டுக்குக்கூட அநுப்ப சவுகரியம் நமக்கு

(தொடர்ச்சி 8-வது பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

க்ரோதன-ஞூ கார்த்திகை-மீ உ௯-வ

## இந்து மகா சபையும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும்.

இந்து மகாசபை ஆதியில் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே, இது பிராமண ஆதீனத்திற்காக ஏற்படுத்தப்பட்டதென்றும், பிராமணரல்லாதாரின் பிறவி இழிவைப் பலப்படுத்துவதாய் முடியுமென்றும், இந்தியாவின் ஜனசமூகத்தின் நாலிலொரு பாகத்திற்கு மேலாய் இருக்கும் மகமதிய சகோதரர்களின் அதிருப்திக்கும், சந்தேகத்துக்கும் இடமளிக்கக்கூடியதாகுமென்றும், இந்து மகாசபை ஆரம்பித்ததற்கே, மகமதிய சகோதரர்களின் நடபடிக்கையைத்தான் முக்கிய காரணமாகச் சொல்லி வருவதால், வெகு கஷ்டப்பட்டு மகாத்மாவினால் ஏற்பட்ட இந்து—முஸ்லீம் ஒற்றுமை அடியோடு மறைந்து போகுமென்றும், நமது குடிஅரசின் பத்திராதிபர் பல தடவைகளிலும், பல பிரசங்கங்களிலும் சொல்லிக்கொண்டே வந்திருக்கின்றார்.

அதுமாத்திரமல்லாமல், நமது தமிழ் நாட்டில், இந்து மகாசபைக்குக் கிளைகளாக ஏற்படுத்தப்பட்ட சபைகளிலெல்லாம், வருணாச்சிரம தர்மிகளும், பிறவியிலேயே தாங்கள் உயர்ந்தவர்களென்று சொல்லிக் கொள்ளுபவர்களுமே, அக்கிராசனாதிபதிகளாகவும், காரியதரிசிகளாகவும், நியமுகம் பெற்றிருக்கின்றார்களென்பதும், அநுபவத்தில் தெரிந்தவிஷயம். பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக, இந்து சபையிலிருக்கும்பொழுது, தீண்டாமையொழிய வேண்டுமென்று ஓர் போலித்தீர்மானத்தை ஏற்படுத்திக்கொள்ளுவதும், அதே ஆசாமிகள் மறுபடியும் வருணாச்சிரம சபையென்று ஒன்று கூட்டி, அதிலும் உட்கார்ந்து கொண்டு, தீண்டாமை, வேதசம்மதமென்றும், மநுதர்ம விதியென்றும், வருணாச்சிரமதர்மத்தைக் காப்பாற்றவேண்டுமென்றும், இதற்கு விரோதமாய் இருக்கும் மகாத்மா காந்தியை ஒழிக்க வேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்வதை நாம் பார்க்கிறோம்.

சென்னை மாகாணத்தின் இந்து மகாசபையின் கிளைத்தலைவர், ஸ்ரீமான். டி. ஆர். ராமச்சந்திர ஐயர் என்பதை வாசகர்கள் அறிவார்கள். அவர் வருணாச்சிரமதர்மத்தினுடையவும், பிறவியில் தான் உயர்ந்த பிராமண ஜாதியாமென்பதினுடையவும், தீண்டாதான் என்பவன் தெருவில் நடக்கக்கூடாது; கண்களில் படக்கூடாது; என்பதினுடையவும் அவதாரம். அதே மாதிரி கும்பகோணம், தஞ்சை, நாகபட்டணம், கோயமுத்தூர், முதலிய இடங்களிலுள்ள இந்து மகாசபைத் தலைவர்களும், சென்னைத் தலைவருக்கு இளைத்தவர்களல்ல. கும்பகோணம் இந்துமகாசபையிலேயே, தீண்டாமை சாஸ்திர சம்மதமானதென்றும், அதை ஒழிக்கக்கூடாதென்றும், ஓர் தீர்மானம் செய்திருப்பதாக நமக்கு ஞாபகமிருக்கிறது. இப்படியிருக்க, இந்து மகாசபையை நாட்டில் பரப்புவது எப்படி இந்துமதத்திற்கு நன்மை பயப்பதாகும்? ஓர் கொள்கைக்காக ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டால், அந்தக் கொள்கைப்படி நடப்பவர் கிடைக்காவிட்டாலும், அந்தக் கொள்கையை நம்புகிறவர்களாவது, அந்த ஸ்தாபனத்தை நடத்துகிறவர்களாயிருக்க வேண்டாமா? ஸ்ரீமான். டி. ஆர். இராமச்சந்திர ஐயர் தீண்டாமையை ஒழிப்பதைக் கொள்கையாகக்கொண்ட ஒரு சபைக்கு அக்ராசனம் வகிப்பதானது, வாஸ்தவத்திலேயே அச்சபையின் யோக்கியதையைக் காட்டுவதாகுமா? அல்லது அச்சபையின் புரட்டுகளைக் காட்டுவதாகுமா?

நமது நாட்டிலுள்ள சில வைதீகர்கள் எப்படிப் பாமர ஜனங்களை ஏமாற்றி ஆதிக்கம் பெறலாம், என்கிற கொள்கைக்கு ஸ்தாபனங் கண்டுபிடிக்கக் கருத்தாய் இருக்கின்றார்களேயல்லாமல், உண்மையாக ஓர் காரியத்தைச் செய்வதற்கு ஒருவருமில்லை. இந்துமகாசபையின் ஸ்தாபகர் ஸ்ரீமான். மாளவியா அவர்களே, தீண்டாதாரைப்பற்றிப் பேசும்போது, கண்களில் ஜலம் விடுகின்றாரேயல்லாமல், பிறவியில் தனக்கும், தீண்டாதாருக்கும் வித்தியாசம் இல்லையென்பதை ஒப்புக்கொள்ளுவதேயில்லை. தன்னைப் பெரிய வருணாச்சிரம தர்மியாகத்தான் ஒப்புக்கொள்ளுகிறார். முஸ்லீம்களின் உபத்திரவங் காரணமாக இந்துமகாசபையை ஏற்படுத்த வேண்டியதாயிற்று என்று சொன்ன காரணத்தால், பஞ்சாபில் முஸ்லிம்கள் நடத்தையால் அதிருப்தி கொண்ட லாலாலஜபதிராய் அவர்களும், இந்துமகா சபையில் சேர்ந்து, இந்துமகா சபைக்கு உழைக்க முன் வர வேண்டியதாயிற்று.

இந்துக்கள் அதிகமாயிருக்கிற பாகங்களில், இந்துக்களல்லாதவர்களைத் தாழ்மையாகக் கருதுவதும், இந்துக்களில் பிராமணர்கள் அதிகமாயிருக்கிற பாகங்களில், பிராமணரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும், மகமதியர் அதிகமாயிருக்கிற பாகங்களில், மகமதியரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும், கிறிஸ்தவர்கள் அதிகமாயிருக்கிற பாகங்களில், கிறிஸ்தவரல்லாதாரைத் தாழ்மையாகக் கருதுவதும், பெரும்பாலும் உலக சுபாவமாகவே கருதுகிறோம். அத்தோடு, கொஞ்சம் செல்வாக்குள்ளவர்களும், செல்வாக்கில்லாதவர்களைத் தாழ்மையாகவே கருதுவதும், சுபாவமாகத்தானிருக்கிறது. உதாரணமாக, இந்துக்கள் மகமதியர்களையும், கிறிஸ்தவர்களையும், மிலேச்சர்களென்று சொல்லுவதையும், மகமதியனைத்தொட்டால், தொட்ட பாகத்தை வெட்டியெறிய வேண்டுமெனச் சொல்லிவந்ததையும், இந்துக்களுக்குள் பிராமணனை, பிராமணரல்லாதார் மிலேச்சர்களென்று அகராதியில் எழுதியிருப்பதையும், பிராமணர், பிராமணரல்லாதாரை விபசாரி மகன், வேசிமகன், சூத்திரன் என்று எழுதி வைத்துக்கொண்டிருப்பதையும், மகமதியர் இந்துக்களைக் காபர் அதாவது, நாஸ்திகர்களென்று சொல்லுவதையும், கிறிஸ்தவர்கள் இந்துக்களை அஞ்ஞானிகளென்று சொல்லுவதையும், தினமும் பார்த்தும், கேட்டும் வருகிறோம். இத்தத்துவத்தினாலேதான், இன்றையத்தினம் நாம் நமது ராஜ்ஜியத்தை இந்திய அரசாங்கமாகச் செய்து கொள்ளாமல், பிரிட்டிஷ் அரசாங்கமாகச் செய்து வைத்துக் கொண்டிருக்கிறோம். நமது பொய்க்கிளர்ச்சிகளின் பலனாக ஒரு சமயம், பிரிட்டிஷ் அரசாங்கம் தொலைந்தாலும், ஜெர்மனி அரசாங்கமோ, ஜப்பான் அரசாங்கமோ, அல்லது வேறுஎந்த வெளிநாட்டு அரசாங்கமோ, ஏற்படுமேயல்லாமல், ஒருக்காலும் இந்திய அரசாங்கம் ஏற்படுமென்று கருதுவதற்கே வகையில்லாமலிருக்கிறது. லாலாலஜபதிராய் அவர்கள் தமது பிரசங்கத்தில், "முஸ்லீம்கள், முஸ்லீம் ராஜ்யம் ஸ்தாபிக்க வேண்டுமென்று ஏதோ ஓர்பத்திரிக்கை எழுதுவதாகவும், வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் கேட்பதாகவும், ஆதலால் இடங்கொடுக்கக்கூடாதென்றும்" வெகு எளிதில் சொல்லிவிட்டார்.

இந்திய அரசாங்கத்தில், இந்திய ஜனசங்கையில் நாலிலொரு பங்குக்கு மேற்பட்ட பெரிய சமூகத்தாராகிய மகமதிய சகோதரர்களுக்குப் பங்கு உண்டா? இல்லையா?.

அவர்கள், ஏழுகோடிப்பேரும், இனிமேல் இந்தியாவை விட்டுப் போய்விட முடியுமா? அவர்கள் சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால், ராஜீயவிஷயத்திலும், மதவிஷயத்திலும் நமக்குச் சரியான அந்தஸ்துப் பெற்றுத்தானே ஆகவேண்டும். வகுப்புவாரிப்பிரதிநிதித்துவமில்லாவிட்டால், அவர்களுக்குச் சமஉரிமை கிடைத்துவிடுமா? வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம் மகமதியர்களுக்கு ஏற்படாததற்கு முன், மகமதியர் கொஞ்சமாயுள்ள எந்தப் பிரதேசத்திலாவது, தேர்தல்களில் ஒழுங்கான பிரதிநிதித்வம் பெற்றிருக்கிறார்களா? அல்லது எந்தக் கிறிஸ்தவர்களாவது அப்படிப் பெற்றிருக்கிறார்களா? உதாரணமாய், நம் நாட்டிலுள்ள தீண்டாதாரென்று சொல்லப்படுவோரை நாம் எப்படி வைத்திருக்கிறோம்? பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு இன்றைக்கு 200 வருடங்களாகியும், ஒரு தீண்டாதானாவது தேர்தல்களில் நின்று இந்தியனுடன் போட்டிபோட்டு ஜெயம்

பெறசக்தியுண்டாக்கியிருக்கிறுனு? எந்த ஒரு தீண்டாதானல்லாத இந்தியனவது, தீண்டாதவனும் நமது சமூகத்தில் மூன்றி லொருபங்கு எண்ணிக்கை யுள்ளவன்தா னே அவனே நிறுத்தி அவனுக்கு நம்மு டைய வோட்டைக் கொடுத்து, நமது அரசி யல்-சமூகவியல் இவைகளில் அவனுக்குள்ள பங்கைக்கொடுக்க வேண்டுமென்று, ஸ்ரீமா ன்கள். மாளவியா, லஜபதிராய் போன்ற யாராவது அநுபவத்தில் காட்டியிருக்கிறுர் களா? மனிதனுகப்பிறந்த ஒவ்வொருவனுக் கும், சமசுதந்தரம் அடைவதோடல்லாம ல், உயர்ந்த நிலைமையையும் அடைய ஆசை ப்படுவது ஒவ்வொரு ஜீவனின் சுபாவமா கும். அப்படியிருக்க, உன்னுடைய சமத் துவத்திற்கு நானும் பிரயத்தனப்படமாட் டேன்; நீ பிரயத்தனப்பட்டால், அதையும் ஒழிப்பதற்கு நான் பிரயத்தனப்படுவேன்; என்று சொல்லுவது சமத்வமனித தர்ம மாகுமா? இந்தியாவில், இந்துக்களும், கிறி ஸ்தவர்களும், மகமதியர்களும், இந்துக்க ளில் தீண்டாதவர்களும், ஒருவருக்கொரு வர் பரஸ்பர நம்பிக்கையும், சமஉரிமையும் பெற்றுலல்லாது, இந்தியா விடுதலேயடையு மென்று நினைப்பது பைத்தியக்காரத்தன மென்றே சொல்லுவோம். சமஉரிமையும், நம்பிக்கையும் ஏற்படவேண்டுமானல், வகு ப்புவாரிப்பிரதி நிதித்துவம் மனம் ஒப்பிக் கொடுப்பதுதான் ஏற்றமருந்தாகும். வகுப் புவாரிப்பிரதிநிதித்துவ உணர்ச்சியைஅடக் கி மழுப்பிவிடலாமென்று நினைப்பது, சரீர த்தில் ஏற்பட்ட ஒரு புண்ணை மருந்துபோ டாமல் மூடிவைத்து விடுவதினுல், அது ஆறிப்போகுமென்று நினைப்பது போற் தான்முடியும். இந்துமகா சபைக்கு வகுப் புவாரிப்பிரதிநிதித்துவம் விரோதமென் று சொல்வதானுல், அவ்விந்துமகாசபை, நமது தேசத்தின் ஒற்றுமைக்குறைவுக்கும், துவேஷத்திற்கும், ஏற்பட்ட மற்ருெரு சா தன மென்றுதான் சொல்லவேண்டும். வகு ப்புவாரிப்பிரதி நிதித்துவத்தைப்பற்றி இந் துப் பத்திரிக்கையென்னும் பிராமணப் பத்திரிக்கை எழுதியிருப்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். அதாவது:—

"வகுப்புவாரிப்பிரதிநிதித்துவம், ஜன ங்களிடை சுயமதிப்பை உண்டுபண்ணியிரு க்கிறதென்பதையும், சமூதாயமுன்னேற்றத் துக்குக் காரணமாயிருக்கிறதென்பதையும், அது ஏற்படுவதற்குமுன் ராஜீய வாழ்வில் அலக்ஷியமாயிருந்த வகுப்பினர்க்கு ராஜீய அறிவுபுகட்டுவதற்கான வசதிகளை அது உண் டுபண்ணியிருக்கிறதென்பதையும் மறுக்க முடியாது." என்று எழுதியிருக்கிறது.

இந்தக்குணங்களை வகுப்புவாரிப்பிரதி நிதித்துவம் உண்டாக்கியிருக்குமேயானு ல், இந்தியாவிலுள்ள மற்றஎல்லாஸ்தாப னங்களையும்விட வகுப்புவாரிப்பிரதிநிதித் துவம் அதிகப்பலன் அளித்திருக்கிறது என்பதில் சந்தேகம் உண்டா? ஆதலால், இந்துமகாசமூகமானது ஒருகூட்டத்தாரி ன், ஒரு குறிப்பிட்ட கொள்கைக் கு அநுகூலமானதேயல்லாமல் தேசப்பொதுநன்மைக்கும், சமூக ஒற்று மைக்கும் உற்றதல்லவென்பதையும், வகு ப்புவாரிப்பிரதிநிதித்வம்தான், தேச ஒற்று மைக்கும், சமூக முன்னேற்றத்திற்கும், பரஸ்பர நம்பிக்கைக்கும் சஞ்சீவியென்ப தையும் நாம் உறுதியாகச் சொல்லுவோம்.

## தமிழ் நாட்டில் மழையினல் நேர்ந்த கொடுமை.

### இஞ்சின் உள்பட ஐந்து வண்டிகள் கவிழ்ந்து சுமார் பல பேர் மாண்டார் கள். பல பேர் காயமடைந்தார்கள்.

**மாயவரம் அரந்தாங்கி ரேயில்வேலயன்.**

மாயவரம்-அரந்தாங்கி லயனில், இம்மாதம் 11-ந்தேதியன்று இரவு பட்டுக்கோட்டை க்கும், அதிராமன் பட்டணத்திற்கும் மத் தியில் கனத்தமழையின்காரணமாகவும், ஓர் பெரியகுளம் உடைப்பெடுத்ததின் காரண மாகவும், காட்டாற்றில் ஏராளமான வெள் ளம் வந்ததினுலும், ரெயில்லேலயன் மீது இரண்டு அடித் தண்ணீர் ஓடியதல்லாமல், ரெயில்வேப் பாதையின் கரை அழுந்தி விட்டதுடன், ரயில்பாதையே அமுங்கி விட்டதாலும், அப்போது ஓடிக்கொண்டி ருந்த ரெயில் வண்டியின் இஞ்சினும், ஐந்து வண்டிகளும் கீழே கவிழ்ந்து விட்டது. இத் துடன், இரண்டு வண்டிகள் முழுவதும், இர ண்டு வண்டிகள் பாதியாகவும், ஒன்றுக்குள் ளொன்று புகுந்துகொள்ளப் பலர் கொல் லப்பட்டுப்போயினர். இறந்து போனவர் களின் தொகை அதிகமாக இருக்குமென்று கூறப்படுகிறது. பலருக்கு க்காயமேற்பட்டிருப்பதுடன், அநேகரு டைய நிலைமை கவலைக்கிடமாயிருக்கிறது.

**மதுரை.**

மதுரையில் சென்றஒருவாரமாகபெய் தகனத்தமழையால், வைகையிலும்,கிளைகா ல்வாய்களிலும் வெள்ளம்பெருகி வருகிற து. முனிசிபாலிட்டியார் வேண்டிய முன் னெச்சரிகையான வேலை செய்துவருகிறுர் கள். ஆற்ரோத்து வீடுகளில் வெள்ளம் பிரவேசித்திருக்கிறது.

**மதுரை—ராமேஸ்வரம்பாதை.**

மதுரை—ராமேஸ்வரம் லயனில், சுலேமான் திருப்புவனம் ஸ்டேஷன்களுக்கிடையில் 2-மையில் தூரத்திற்கு ரயில்வேபாதை வெள்ளத்தால் பிடுங்கப்பட்டுப்போய்விட் டதால், மதுரை-ராமேஸ்வரம் ரயில் போக் குவரத்து நின்றிருக்கிறது.

**நீலகிரி**

நீலகிரியில் பெய்த 10 இஞ்சு மழையினல், மலைகள் சரிந்து விழுந்து ரயில்வே போக்கு வரத்துகள் நிறுத்தப்பட்டிருக்கிறது.

**மதராஸ்.**

சென்னையில் சென்ற பலநாள்களாக கனத்தமழை பெய்ததின் காரணமாய், பல வீடுகள் இடிந்து விழுந்து பல உயிர்களுக் கும் சேதமேற்பட்டு விட்டது.

---

### கோயமுத்தூர் தியாகராய வைத்திய சாலைத்திறப்புவிழா.

கோயமுத்தூரில் பிரபல கனவானுன திருவாளர். வெரிவாட செட்டியாரவர்களா ல் கட்டப்பட்டிருக்கும், தியாகராய வைத் தியசாலை என்னும் தரும வைத்தியசாலை யை, ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாய க்கரவர்களால், நாளது மீ 16-உ திறந்து வைக்கப்படும்.

### தியாகராயர் திருநாள்.

இம்மாதம் 16, 17, 18-ந்தேதி ஆகிய மூன்று நாட்களையும், காலஞ்சென்ற பெரி யாரான ஸ்ரீமான். பி. தியாகராய செட்டி யாரின் நினைவுக்குறிய திருநாளாகக் கொண் டாடவேண்டுமென்று, கனம். பனகல் இராஜா ஓர் அறிக்கைவெளியிட்டிருக்கிறுர். இதனைப் பற்றி "லோகோபகாரி" பத்திரிக் கை பின்வருமாறு எழுதுகிறது:—

"டிசம்பர் மாதம் 16, 17, 18-ந்தேதி களை காலஞ்சென்றபெரியாரான திரு. பி. தியாகராய செட்டியாரவர்களின் திருநா ளாகக்கொண்டாடவேண்டுமென்று தீர் மானித்திருக்கிறுர்கள். காலஞ்சென்ற பெரி யாருக்கு ஞாபகச்சின்னம் ஒன்று ஏற்படுத் தவேண்டுமென்றும், அவர் கொள்கைகளை நாடெங்கும் பரப்பவேண்டுமென்றும், அத ற்காக நன்கொடைகள் வசூலிக்கவேண்டு மென்றும் முடிவு செய்திருக்கிறுர்கள். காலஞ்சென்ற தியாகராயர் நாட்டின் நல் வாழ்வு கருதியும், சிறப்பாகப் பிராமணரல் லாதாரின் பெருவாழ்வு கருதியும், பெருந் தொண்டு செய்தாரென்பதை யாரும் மறக் கமுடியாது. அவர் திருநாளைத் தக்கதோர் முறையில் கொண்டாடவேண்டும். அவர் நினைவை மற்றவர்கள் எவ்வாறு கொண்டா டினும் கொண்டாடட்டும். தியாகராயர் பெயரால் நாட்டிலே தகுதியான பல இட ங்களில், கதர் நெசவுச்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்று நாம் சொல்லுவோம். இதனுல் பிராமணரல்லாதார் பெரும்பயன டைவார்கள். காலஞ்சென்ற செட்டியார், சென்னையில் சுமார் பதினைந்து வருடங்களு க்குமுன் ஒரு நெசவுச்சாலையைத் தமது சொந்தப்பொறுப்பில் நடத்தி வந்தமை இ தனையொட்டி நமது நினைவுக்குவருகிறது."

நமது சகோதரப் பத்திரிக்கையின் ஆசைகளை நாம் மனதார ஆமோதிக்கி றோம். காலஞ்சென்ற பெரியாரின் திரு நாளை, உண்மைப் பிராமணரல்லாதார் யாவ ரும் தக்கசிறப்புடன் கொண்டாடவேண்டு மென்பதே நமது விருப்பமாகும். இதனை அறிந்தும், பிராமணரல்லாத பத்திரிக்கை கள்பல மௌனஞ் சாதித்திருப்பதை நோ க்கும்போது, இப்பத்திரிகைகள் இத்திரு நாளைக் கொண்டாடவேண்டுமென எழுதி னல், பிராமணப்பத்திரிக்கைகளும், அப்பத் திரிக்கைக் கோஷ்டியினரும் இவர்கள் ஜஸ் டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டார்கள் எனக் கூச்சலிடுவார்கள் எனப்பயந்து இருக்கின் றுர்கள்போலும்; யார் எப்படியிருந்தபோ திலும் நமக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. பிராமணரல்லாதார் இத்திருநாளைக் கொண் டாடவேண்டுமென மீண்டும் வலியுறுத்து கிறோம்.

(5-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

இருக்கின்றதென்றும், சொல்லிக்கொண்டு வரும்போது, ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு நீங்கள் ஏன் இப்போது கதர் உடுத்தவில்லையென்று கேள்வியை எழுதிக் கேட்டார். அதற்கு டாக்டர். முதலியார் சொன்னதாவது:— இம்மாதிரியான கேள்வி நான் எதிர்பார்த்ததுதான், எனக்கும், எங்கள் கட்சியாருக்கும் கதரில் பூரண நம்பிக்கை உண்டு. அத்துடன் சுதேசத்துணியிலும் நம்பிக்கை உண்டு. நான் இப்போது அணிந்திருப்பது சென்னையிலேயே தயாரிக்கப்பட்ட சுதேசப்பட்டாடை. இந்தியப் பொருளாதார நிலைமை உயரவேண்டுமானால், கதரும், சுதேசித்துணியாலும்தான் ஆகவேண்டுமென்பதே எங்களுடைய நம்பிக்கை. எங்களிலொவ்வொருவரும் கதரையும் உபயோகப்படுத்திக்கொண்டுதான் வருகிறோம். அநேகர் வீட்டிலும், வெளியிலுங்கூட கதரைத்தான் கட்டுகிறார்கள். அதையொரு சாதாரணஉடையாக மதிக்கிறோமேயல்லாமல், சுயராஜ்யக் கட்சியாரைப்போல் வேஷ உடையாக மதிப்பதில்லை. சுயராஜ்யக்கட்சியைப்போல் சமயத்திற்குத் தகுந்த வேஷம் போடும் குணமும் எங்களுக்குக் கிடையாது. மேடைகளில் நின்று, மதுபானம் செய்யக் கூடாது என்றும், கதர் கட்டவேண்டும் என்றும், பேசிவிட்டு வீட்டுக்குள்ளிருக்கும்போதும், வெளிதேசங்களுக்குப் போயிருக்கும்போதும், அந்நிய துணி உடுத்துவதும், மதுபானம் செய்வதுமான வழக்கங்கள் எங்களிடம் கிடையாது, என்று சொல்லி கதர்ச் சாலையைத்திறந்து வைத்தார். பிறகு, அக்ராசனர் முடிவுரையுடன் கூட்டம் முடிந்தது.

பிறகு மாலையில், 'இந்திய ஜனத்தலைவர்' என்பது பற்றியும், 'இனி நமது வேலை' என்பதுபற்றியும் அதே இடத்தில் ஒரு உபந்யாசம் நடந்தது. "இந்திய ஜனத்தலைவர்" என்பது பற்றி ஸ்ரீமான். வரதநஞ்சையா பிள்ளை அரியமேற்கோள்களுடன் ஓர் அருமையான உபந்யாசம் செய்தார். பிறகு டாக்டர். நடேச முதலியார் "இனி நமது வேலை" என்பது பற்றிப் பேசும்போது, இதுவரையில் ஜஸ்டிஸ் கட்சியார் செய்துவந்த வேலைகளைச் சொல்லி வருகையில், கல்வி விஷயத்தில் ஜஸ்டிஸ் கட்சியார் இல்லாவிட்டால், பிராமணரல்லாத பிள்ளைகள் இவ்வளவு படித்திருக்கமுடியாதென்றும், பிராமணர்களே பள்ளிக்கூட உபாத்தியாயர்களாகவும், பிராமணர்களேபரிக்ஷை அதிகாரிகளாகவும் இருக்கிறதினால், நமது பிள்ளைகளைப்பரிக்ஷையில் தேறுவதற்கில்லாது செய்துவிடுகின்றார்களென்றும், தங்கள் வீட்டுப்பையனை 5-ம் பாரத்தில் படிக்கும்போதே, உனக்குப்படிப்புவராது; உன் வாயிலேயே இங்கிலீஷ் நுழையாது; ஏன் தெண்டத்துக்குப் பள்ளிக்கூடத்துக்கு வருகிறாய்? உன் அப்பாவிடம் சொல்லி ஏதாவது கடையிற் கொண்டுபோய்ச் சேர்க்கச்சொல், என இம்மாதிரியாக மனது உடைபடும்படியாகவே பிராமண உபாத்தியார்கள் பேசி வந்தார்களென்றும், அதோடு அவனை மேல்வகுப்புக்கு பிரமோஷன் செய்யாமல் நிறுத்திவிட்டார்களென்றும், பின்பு அதே பையனை பிராமணரல்லாத உபாத்திமார்களுள்ள ஓர் பாதிரிபள்ளிக்கூடத்திற்கு அழைத்துப்போய்ச் சேர்த்ததாகவும், அவன் பீ. ஏ. வகுப்புவரையிலும் ஒவ்வொரு வகுப்பிலும் முதற் பிள்ளையாகயிருந்து பீ. ஏ. பாஸ்செய்தானென்றும், இப்படியேதான் நமது பிள்ளைகளைப் பிராமண உபாத்தியாயர்களும், பிராமணபரிக்ஷை அதிகாரிகளும் பூஜ்யம் போட்டுச்சுழித்துவிடுகின்றார்களென்றும், பிராமணப்பிள்ளைகள் எவ்வளவு முட்டாள்களாகவும், மந்தமாகவுமிருந்தாலும் வேண்டிய மார்க்குகள் கொடுத்து பரிக்ஷையில் தேறவைத்து விடுகின்றார்களென்றும், இன்னும்பல துறைகளில் பிராமணர்களுடைய சூழ்ச்சியெல்லாம்ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் கண்டுபிடித்து அதற்குத்தக்க பரிகாரம் செய்யமுயற்சித்து வருகின்றார்களென்றும், ஆதலால் நீங்கள் எல்லாரும் அக்கட்சிக்கு வேண்டிய ஆதரவளிப்பதோடு, பிராமணர்களுடைய கக்ஷியான சுயராஜ்யக்கட்சியின் வலையில் சிக்கி பிராமணரல்லாதாருக்குக் கேடுவிளைவித்து விடக்கூடாதென்றும் பேசினார். பின்பு. ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் பேசியபின் கூட்டம் கலைந்தது.

---

## மநுநீதி கண்டமுறை.

### "உதைத்துக்கோன்றதற்கு ரூபாய் 200 அபராதம்"

அஸாம் தேயிலைத்தோட்டத்தில், வேலைசெய்த ஓர் இந்தியக்கூலியை உதைத்துக் கொன்ற ஓர் ஐரோப்பியருக்கு 200 ரூபாய் அபராதம் விதித்ததைக் கேட்க இந்தியர்கள் மனம் பதறுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனபோதிலும், இதுமுதல் தடவையல்ல. இதற்கு முன்பல தடவைகளில் இதைவிடக்கொடுமையான சம்பவங்கள்பலவற்றைப் பார்த்திருக்கிறோம்.

இரண்டொரு ஆண்டுகளுக்குமுன்பாக, செயில்காட் என்கிற இடத்தில், ஓர் இந்திய ஸ்திரீயை நிர்வாணமாய் இழுத்துக் கொண்டுபோய் இரத்தம் வரும்படியாகப் புணர்ந்த ஓர் ஐரோப்பிய சோல்ஜருக்கு, 25 ரூபாய் அபராதம் விதித்த மாஜிஸ்திரேட் தீர்ப்பு எழுதுகையில், "ஓர் இந்தியஸ்திரீயை, ஓர் ஐரோப்பியர் புணர்ந்ததை ஓர் பெரிய தப்பென்பதாக நான் எடுத்துக்கொள்ளவில்லை, ஆனால் இரத்தம் வரும்படி புணர்ந்ததற்காக அபராதம்விதிக்கும்படியிருக்கிறது. ஆதலால், அதற்காக 25 ரூபாய் அபராதம் விதிக்கிறேன்" "எனக்குறிப்பிட்டிருந்தது நேயர்கள் ஞாபகத்திலிருக்கும். வெள்ளைக்காரருடையவும், அரசாங்கத்தாருடையவும், இதுபோன்றசெய்கைகள், மநுக்கத்தகுந்ததும், இந்து தர்மத்திற்கேஆதாரமானதுமான மநுதர்ம சாஸ்திரத்தை நமக்கு ஞாபக மூட்டுகிறது. ஏறக்குறைய வெள்ளைக்காரருடையவும், அரசாங்கத்தாருடையவும், செய்கையும், மநுதர்மசாஸ்திரத்தை அடிப்படையாக வைத்துத்தான் கட்டப்பட்டிருக்கிறது என்கிற விஷயத்தில், நமக்கு அதிகமான சந்தேகம் தோன்றுவதே கிடையாது. ஏனெனில், மநு 8-வது அத்தியாயம் 380-வது சுலோகத்தில் "பிராமணன் எப்பேர்ப்பட்ட பாவமான செய்கைசெய்தாலும், அவனைக் கொல்லக் கூடாது, காயமும் செய்யக்கூடாது, வேண்டுமானால் அவன்பொருளை அவனுக்குக்கொடுத்து வேற்றூருக்கு அநுப்பிவிடலாம்" என்றும், 381-வது சுலோகத்தில் "எவ்வளவு பெரிய குற்றமானாலும், பிராமணனைக்கொல்லவேண்டுமென்று அரசன் மனதிலும்நினைக்கக்கூடாது" என்றும், 379-வது சுலோகத்தில், "பிராமணனுடைய தலையை மொட்டையடிப்பது கொலை தண்டனையாகும்" என்றும், ஸ்திரீவிஷயங்களில் சூத்திரன் காவலில்லாத பிராமண ஸ்திரீயைப் புணர்ந்தால் ஆண்குறியை அறுத்து அவன் தேக முழுவதையும் துண்டு துண்டாக வெட்டி அவனுடைய எல்லாப்பொருள்களையும் பிடுங்கிக்கொள்ள வேண்டும் என்றும், "ஒருபிராமணன் கற்புடைய ஒரு ஸ்திரீயை துராக்ரதமாகப் புணர்ந்தாலுங்கூட ஆயிரம் பணத்திற்குள் அபராதம் விதிக்க வேண்டும்" என்னும் கொள்கையுள்ள இந்துதர்ம சாஸ்திரங்களைப் பிரிட்டிஷார் பின்பற்றுவதில் நமக்கு ஒன்றும் ஆச்சரியமாகத் தோன்றவில்லை. ஆனால், இவற்றை அநுமதித்துக் கொண்டு ஓர் பெரிய சமூகம் உயிர் வாழ்கிறதே யென்பதைப்பற்றித்தான் நாம் கவலை கொள்ளுகிறோம்.

---

## கொல்லை வழிப்பிரவேசம், சாக்கடை வழிப் பிரவேசத்தை விட மோசமானதா?

சென்னை ஜஸ்டிஸ் கக்ஷியைச்சேர்ந்த ஸ்ரீமான். தணிகாசலம் செட்டியாரவர்கள், சென்னை கார்ப்போரேஷனுக்குள் நியமனம் மூலியமாய் பிரவேசித்ததைக் கொல்லை வழியென்று சில பிராமணப்பத்திரிகைகள் கூக்குரலிடுகின்றன. ஆயினும் நமக்கு அதைப்பற்றிக்கவலையில்லை. சுயராஜ்யக்கட்சியாரும், அதன் தலைவர்களும் சாக்கடைவழியில் பிரவேசிக்கிறார்களே, இதைவிட ஜஸ்டிஸ் கக்ஷிக்காரருடைய நடவடிக்கை எப்படி மோசமாகும்? கோயமுத்தூர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித்தலைவரும், சுயராஜ்யக்கக்ஷித் தலைவருமான ஓர் பிராமணர், பிராமணருக்கு விரோதமான கக்ஷியென்றும், நாட்டிற்குப் பிற்போக்கான கக்ஷியென்றும், சர்க்கார் உத்தியோகத்துக்கும், சுயநலத்துக்கும் ஆசைப்பட்டகக்ஷியென்றும், தன்னால் சொல்லப்படுகிற, ஜஸ்டிஸ் கக்ஷியின் ஆதிக்கத்திலிருக்கிற இலாகாக்களிலொன்றான, ஜில்லாபோர்டு அங்கத்தினர் ஸ்தானத்துக்கு, ஒத்துழையாமையையும் முட்டுக்கட்டையையும் ஆதரிக்கிறதத்துவங்களைக்கொண்டவர், பனகால் இராஜாவைக் கெஞ்சி அவரைஏமாற்றி, ஜில்லா போர்டுமெம்பர் பதவிபெறுவது சாக்கடை வழியில் செல்லுவதா? அல்லவா? ஜஸ்டிஸ்கக்ஷியாரின் கொள்கைப்படி ஸ்தலஸ்தாபனங்களில் நியமனம் பெறுவது கடுகளவு அறிவு உள்ளவனும் ஒருக்காலும் கொல்லைவழி

யென்று சொல்லவே மாட்டான். ஒருக்கால் தேர்தலில் தோற்றுப்போய் நியமனம்பெற்றது குற்றமென்று நினைப்பார்களேயானால், டாக்டர். நாயர் போன்றவர்களெல்லாம் காரியத்தின் அவசியத்தைக்கோரியும், தேர்ந்தெடுக்கும் ஜனங்களின் அறியாமையை உத்தேசித்தும், போட்டியாய் நிற்பவர்களின் தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும், கண்ணியக்குறைவான நடத்தைகளையும் அறிந்தும், இம்மாதிரியான காரியங்களில் வழி காட்டியிருக்கிறார்கள். ஆனால், தேர்தல்களில் நிற்கக்கூட யோக்கியதையற்றவர்களும் நிற்பதானால் பத்தாயிரம், இருபதினாயிரம் செலவழித்தாலல்லாமல் வெற்றிபெற முடியாமலிருக்கிற ஒரு கூட்டத்தார், இம்மாதிரி நடப்பதற்கு வேறு யாராவது வழிகாட்டியிருக்கிறார்களா? இவையெல்லாம் ஒரு ஜாதியாரின் ஆக்கத்தைக் குறைக்கவேண்டுமென்ற சூழ்ச்சியும், யோக்கியதையற்றவர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்ற பேராசையும், தங்கள் ஜாதியாரிடத்தில் செல்வாக்குள்ள பத்திரிக்கைகள் இருக்கின்றதென்கிற அகம்பாவமும், இப்படி எழுதச் செய்கிறதே அல்லாமல், யோக்கியமானவர்களுக்கு இதில் எவ்விதமான உண்மையும் இருப்பதாக நமக்கு விளங்கவில்லை. ஒத்துழையாமை என்பது இல்லையானால், சுதந்தர புத்தியுள்ளவர்களுக்குத் தேர்தலுக்கும், நியமனத்துக்கும் அளவு கடந்த வித்தியாசமில்லையென்பதுதான் நமது அபிப்ராயம். இரண்டு பேரும் தங்களிஷ்டம்போல் வேலைசெய்ய ஸ்தலஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது. மொத்தத்தில் தற்காலமுள்ள எந்த ஸ்தாபனங்களிலும், தேர்தெடுப்பு மூலியமானாலும், நியமனம் மூலியமானாலும் உள்ளே செல்லுவதால் பிரமாதமான அரசியல் காரியம் எதுவும் செய்யமுடியாதென்பதோடு, அதைத் தனது சுயநன்மைக்கு ஓர் பதவியாக மாத்திரம் உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்பது தான், நமது தாழ்மையான அபிப்ராயம்.

## நிருப நேயர்களுக்கு.

நமது பத்திரிகை ஓர் வாரப்பத்திரிகையேயாகும். குறிப்பிட்ட கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்கென இது ஏற்பட்டிருக்கிறதே யன்றி, வர்த்தமானங்களுக்கென இது ஆரம்பிக்கப்பட்டதன்று. ஆகையால், நேயர்கள் அனுப்பும் நீண்ட வியாசங்களையும், விஷயதானத்தையும் ஏற்று நமது பத்திரிக்கையில் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். நமது பத்திரிக்கையின் நோக்கத்தைத் தழுவி, சுருக்கமாய், கடிதாசியின் ஒரே பக்கத்தில் எழுதி அனுப்பப்படும் வியாசங்கள் மட்டும் கூடிய மட்டில் பிரசுரிக்கப்படும். இதை விஷயதானம் செய்ய விரும்பும் நேயர்கள் கவனிப்பார்களாக.

பத்திரிகாசிரியர்.

## சுயராஜ்யக்கக்ஷிக்கு சாவுமணி

கவர்ன்மெண்டை முட்டுக் கட்டை போட்டு ஸ்தம்பிக்கச் செய்ய ஆரம்பித்த சுயராஜ்யக்கட்சி, கவர்ன்மெண்டுக்கு கொஞ்ச நஞ்சம் இருந்த கட்டையும் அவிழ்த்து விட்டுவிட்டு, தனக்கே முட்டுக் கட்டை போட்டுப் பிரசாரம்கூட செய்ய முடியாமல் தன்னையே ஸ்தம்பிக்கச் செய்து கொண்டது. சுயராஜ்யக்கட்சி இந்த நிலைமைக்குத் தான் வருமென்று முன்னமேயே பலர் சொல்லிவந்தது உலகம் அறிந்ததே. ஆனாலும், ஆசை வெட்கமறியாது என்பது போல் பதவிகளும், உத்தியோகங்களும் பெற ஆசை கொண்டவர்கள், உலகத்தார் முன்னிலையில் தங்கள் சுயமரியாதை எவ்விதம் மதிக்கப்படுகிறது என்பதையே லக்ஷியம் செய்யாமல், ஒன்றுகூடி பொய்ப் பிரசாரத்தையும், பாமர ஜனங்களின் அறியாமையையும் தங்களுக்கு ஆஸ்தியாக வைத்துக்கொண்டு, பதவி வேட்டையையும், உத்தியோக வேட்டையையும் அடைய ஆரம்பித்தார்கள். இதன் பலனால் தேசத்தின் ராஜீய வாழ்வினுள்ள கட்டுப்பாடும், கண்ணியமும், மதிப்பும் நீங்கி சுயநலங்கள் மலிந்து, சுயராஜ்யக் கட்சிக்குள்ளாகவே போட்டிகள் ஏற்பட்டு, ஒருவரையொருவர் வெளிப்படுத்திக் கொள்ளவேண்டியதாயிற்று.

சுயராஜ்யக்கட்சியார் பம்பாயில் கூடி ஒருவரையொருவர் வெளிப்படுத்தாமல் உத்தியோகம் சம்பாதித்துக்கொள்ள வழியுண்டா என்று யோசனை செய்து பார்த்து, ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அது தான் ராஜியென்று சொல்வது.

அதென்னவென்றால், "நான் உன் யோக்கியதையை வெளியில் சொல்வதில்லை; நீ என் யோக்கியதையை வெளியில் சொல்ல வேண்டாம்" என்பதற்கிணங்க, கொஞ்சக்காலத்திற்கு இரு கட்சியாரும் தங்கள் கொள்கைகளைப் பிரசாரம் செய்யக்கூடாதுஎன்று முடிவு செய்து கொண்டார்களாம். இதன் கருத்து என்ன? பொது ஜனங்களுக்கு இவர்கள் யோக்கியதையைத் தெரிவிக்காமல் மறைத்து வைத்திருப்பதுதானே.

ஒத்துழையாமைத் தத்துவத்திற்குக் கேடுவருவதற்கும், இம்மாதிரியாக ஒரு தீர்மானம் ஆமதாபாத்தில் செய்து கொண்டதுதான் காரணமாயிருந்தது.

சுயராஜ்யக் கட்சிக்கும் அதே மாதிரி பம்பாயில் ஏற்பட்டு இருக்கிறது. பாமர ஜனங்களை ஏமாற்றித்தான் உத்தியோகம் பெற, காங்கிரசும், ராஜீயக் கட்சிகளும் இருக்கிறதே அல்லாமல், உண்மையான சுயராஜ்யம் பெறுவதற்கு அல்ல என்பதை இனியாவது பொது ஜனங்கள் உணர்வார்களாக.

(௨-வது பக்கத்தின் தொடர்ச்சி)

நாட்டிலுள்ள யாரையும்விட அதிகமாயுண்டு. உதாரணமாக, இரண்டு மாதங்களுக்கு முன்புதான் ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார், நன்னிலத்தில் ஓர் கூட்டத்தில் பேசும்போது, ஸ்ரீமான் முதலியார் மாரீசன் என்றும், ஜஸ்டிஸ் கக்ஷியிலீடுபட்டவரென்றும், அவரை காங்கிரஸை விட்டு வெளியாக்க வேண்டுமென்றும், சொன்னதை உடனே மறந்து ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் தலைமையின் கீழ் தமிழ்நாடு நடக்கவேண்டுமென்றும், அவர் அரும் பெருந் தலைவரென்றும் சொல்லி, அவரைக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராக்குவது இலேசான காரியமல்ல. இதற்கு பயங்கொள்ளித்தனம் ஓர் காரணமாயிருந்தாலுங்கூட, மன்னிப்புத்தன்மையின் பெருமையை நாம் மறந்துவிடக் கூடாது. ஸ்ரீமான் ஆச்சாரியாரவர்களைப்பற்றியும் பல புராணங்கள் சொன்னவர், எவ்வளவு சீக்கிரத்தில் அதை மறந்து அவரிடத்தில் அன்பு கொண்டவர்போல் நடப்பதென்றால், அதுவும் பெருந்தன்மையின் அறிகுறியேயாகும். எப்படியானபோதிலும் உண்மை முதலியாரின் மனச்சாக்ஷியைப் பற்றியும், அவரது கொள்கைகளைப் பற்றியும், நமக்கு ஒருக்காலும் விரோதமோ, துவேஷமோ கிடையவே கிடையாது. உண்மை முதலியாரின் பலவீனத்தால், சிற்சில சமயங்களில் திடீரென்று போலி முதலியாரின் ஆதிக்கம் பலப்பட்டு தேசத்தையும், சமூகத்தையும் பாழக்கும் நிலைமை ஏற்பட்டுப் போய்விடுகிறதே என்பதுதான் நமது கவலை. அத்தோற்றம் இனித் தோற்றக்கூடாதென்பதுதான் நமது உண்மையான ஆசையேயன்றி, உண்மை முதலியாரின் மனத்தைப் புண்படுத்தவோ, கஷ்டப்படுத்தவோ நாம் ஒரு நிமிஷமும் நினைக்கவேயில்லை; நினைப்பதுமில்லை. நமது கேள்விகளுக்குப் பதில் வந்தவுடன் மற்றவை எழுதுவோம்.

## மகாத்மா காந்தி.

மகாத்மா ஆமதபாத்தினின்றும் தோல்கா பிரதேசத்திற்குச் சென்று அங்கு ஒரு மாதர் மகா நாட்டில், அனைவரும் பரிசுத்தமாக வாழ்ந்து ராட்டினஞ் சுழற்றிக் கதரணிய வேண்டுமென்று போதித்தார். மகாத்மாவுக்கு அங்கு ஒரு பணமுடிப்பு பரிசளிக்கப் பட்டது. மகாத்மா பம்பாய் தேசிய கலாசாலையில் இம்மாதம் 8-ந் தேதி தலைமை வகித்து மாணவர்கட்கு பரிசுகளை வழங்கி சிறு உபதேசம் புரிந்தார். அவர், காங்கிரஸ் கூடும்வரை வார்தாவில் தாமதிப்பார். அவரோடு ஸ்ரீமதி. ஸ்லேட் வார்தாவுக்குச் செல்கிறார். உபவாசத்தின்போது மகாத்மாவின் உடல் நிறை ஒன்பது ராத்தல் குறைந்திருந்தது. இதில் ஆறுராத்தல் இதற்குள் அதிகமாயிருக்கிறது.

## ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபல் சேர்மன்மீது சில கவுன்சிலர்கள் சென்ற மாதம் ஈரோடு முன்சீப் கோர்ட்டில், உண்மையில் நிறைவேறிய தீர்மானத்தை நிராகரித்துவிட்டு, ஒழுங்கற்ற ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியதாக தனது மினிட் புஸ்தகத்தில், சேர்மன் குறித்துக் கொண்டாரென்றும், ஆதலால் அதை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாதென்றும், ஓர் தற்காலத்தடை உத்தரவு பெற்றதைப்பற்றி 15–11–25 "குடிஅரசு" பத்திரிக்கையில் வாசகர்கள் வாசித்திருக்கலாம். அவ்வழக்கு நாளது மாதம் 8 ந் தேதி ஈரோடு டி. மு. கோர்ட்டில் மறுபடியும் விசாரணைக்கு வந்தது. விசாரணையில் இது விஷயத்தில் பிரவேசிக்க முன்சீப் கோர்ட்டுக்கு அதிகாரமில்லையென்றும், அக்ராசனதிபதி என்ற ஹோதாவில் தான் செய்ததற்குத் தானே தான் எஜமானென்றும், தன்னுடைய காரியத்தைச்சரியென்று நிரூபிக்க, சில கவுன்சிலர்களின் பிரமாண வாக்குமூலங்கள் ஆஜர் செய்யப்பட்டிருக்கின்றதென்றும், பிரஸ்தாபத்தடை உத்திரவினால், சிங்காரவனத்தின் வேலைகள் தடைப்பட்டு அதற்கென்று வாங்கிவைத்திருக்கும் செடிகளும், கொடிகளும் காய்ந்து வருகின்றதென்றும், ஜில்லா கலெக்டரும் தனது காரியத்தைச் சரியென்று ஒப்புக்கொண்டிருக்கின்றாரென்றும், ஆகிய இவை முதலிய காரணங்களால், தடை உத்திரவை நீக்கவேண்டுமென்றும், சேர்மன் சார்பாக வாதிக்கப்பட்டது. மற்றொருபுறம், சேர்மன் சொல்லுவது தப்பென்று ருஜுப்படுத்துவதற்கும், ஒழுங்காய் நிறைவேறிய தீர்மானம் இன்னதெனக்கண்டு பிடிப்பதற்கும், மீட்டிங்கின் தீர்மானப் புஸ்தகமே போதுமான ஆதாரவென்றும், அதில் கிரமமான தீர்மானங்கள் எழுதப்பட்டும், அடிக்கப்பட்டுமிருக்கின்றதென்றும், சேர்மன் செய்த காரியங்கள் சரியா, தப்பாவென்று சொல்லுவதற்கு சேர்மனே தான் அதிகாரியென்று ஏற்படுமானால், உலகிலுள்ள முனிசிபாலிட்டிகளெல்லாம் சேர்மேனுடைய சொத்தாகிவிடலாமென்றும், கலெக்டருக்கு இதைபற்றிக் கவுன்சிலர்கள் எழுதியதற்குத் தனக்கு அதிகாரமில்லை யென்று, கலெக்டரிடமிருந்து பதில் வந்துவிட்டதென்றும், மற்றப்படி அவர் எழுதியிருப்பது ஒருபக்ஷத்தை மாத்திரம் கேட்டுக்கொண்டு எழுதிய எழுத்துக்களென்றும், கவர்மெண்டுக்கு எழுதியதற்கு இன்னும் பதில் வாரமலிருக்கின்றதென்றும், செடிகொடிகள் காய்ந்துபோவதால், 20 30 ரூபாய் நஷ்டம்தான் வருமென்றும், தடை உத்திரவை இப்போது நீக்கிவிட்டால், விவகாரம் தங்கள் பக்ஷமாய் ஜெயித்தால் ஆயிரக்கணக்கான நஷ்டத்தை ஈடு செய்ய முடியாதென்றும், இம்மாதிரியான விஷயங்களில் நியாயஸ்தலத்திற்கு அதிகாரமில்லாமற் போய்விட்டால், முனிசிபல் நிர்வாகமே பாழ்பட்டுப்போய் விடுமென்றும், இது முதலான காரணங்களால், தடை உத்திரவை இவ்விவகாரம் தீரும் வரையில் காயமாக்க வேண்டுமென்று சில கவுண்சிலர்களின் சார்பாக வாதிக்கப்பட்டது. கோர்ட்டார் இருவருடைய விவாதங்களையுங் கேட்டு, இவ்விஷயத்தில் பிரவேசிக்கத் தனக்கு அதிகாரமிருக்கின்றதென்றும், தற்காலம் தன்முன் விஷயங்களிருக்கும் நிலைமையில், தடைஉத்தரவைக்காயப்படுத்த வேண்டியது அவசியமென்றும் சொல்லி, இவ்விவகாரம் தீரும்வரை தடை உத்திரவைக்காயப்படுத்தி விட்டார். முனிசிபல் தீர்மானப்புஸ்தகத்தைச்சேர்மன் திருப்பிக் கேட்டபோது, எதிர்க்கவுண்சிலர்கள், அதைச்சேர்மெனிடம் கொடுக்கக்கூடாதென்றும், திருப்பிக்கொடுத்தால், அதில் ஏதாவது திருத்தங்கள் ஏற்பட்டுவிடலாமென்றும், ஆக்ஷேபித்ததின் காரணமாகத்தீர்மானப்புஸ்தகத்தில் கண்ட விஷயங்களைப் பொட்டகிருப் படம் எடுத்துக் கொண்டு வாபீஸ் செய்யப்பட்டது.

## கதர் எல்லையைப் பிரிக்க.

திருப்பூரில் 7-12-25-ல் கதர் உற்பத்தி செய்கிறவர்கள் மகாநாடொன்று ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின் கீழ் கூடிற்று. அக்கூட்டத்திற்கு ஸ்ரீமான்கள். ராஜகோபாலாச்சாரியார், சந்தானம், கரூர். கந்தசாமிசெட்டியார், மாணிக்கம் செட்டியார், வரதாச்சாரியார், எஸ். இராமநாதன் முதலிய கதர் வேலையில் ஈடுபட்டு வேலைசெய்பவர்களும், திருப்பூரிலும், திருப்பூரைச்சுற்றிலுமுள்ள சகலமான கதர் வியாபாரிகளும், கதர் உற்பத்திசெய்பவர்களும், திருப்பூர் காதிவஸ்திராலயம் மானேஜர், ஸ்ரீமான். டப்ளியூ. இக்னேஷியஸ் உட்பட சுமார் நாற்பது பேர் வரையிலும் ஆஜராயிருந்தார்கள்.

அடியிற்கண்ட தீர்மானங்களை ஸ்ரீமான், இராஜகோபாலாச்சாரியார் பிரேரேபிக்க ஏகமனதாய் நிறைவேறியது:—

கதர் உற்பத்தியில் அநாவசியமான போட்டிகள் ஏற்பட்டு அபிவிருத்திக்குத் தடங்கல் உண்டாகாதிருக்கும் பொருட்டு, கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு கதர்வேலை செய்பவர்கள் உடன்படுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

(அ) எவரும் நூற்போர் சங்கத்தாரால் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கிராமங்களைத் தவிர்த்து பிற கிராமங்களிலுள்ள நூற்பவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளக்கூடாது.

(ஆ) ஓரிடத்தில் வேலை செய்யும் நெசவுக்காரரை மற்றோரிடத்தில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவதென்றால் சம்பந்தப்பட்ட எல்லோருடைய சம்மதத்தின் பேரில் தான் செய்ய வேண்டும். இல்லாவிடில் தகுந்தகாரணத்தைக் காட்டி நூற்பவர் சங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

(இ) மேற்கண்ட இரு விஷயங்களிலும் ஏற்படும் தகராறுகளைத் தமிழ்நாடு நூற்பவர்சங்கத்துக்காரியதரிசி தீர்த்துவைக்க ஒப்புக்கொள்ளப்படுகிறது.

(ஈ) இந்தந்த இலாகாவில் இன்னின்னார் வேலை செய்வதென்பதை ஸ்ரீமான்கள். வரதாசாரியார், க. சந்தானம் இருவரையும் காரியதரிசி, கலந்து யோஜித்து இம்மாதத்திற்குள்ளோ அல்லது கூடுமான சீக்கிரத்திலோ வெளியிடவேண்டும்.

தற்போது அடியிற்கண்ட தரத்துக்குக் குறையாமல் கதர் உற்பத்தி செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டது.

பாவிலும், ஊடையிலும் ஓர் அங்குலத்துக்கு 38 இழைக்கும் 36 இழைக்கும் குறையாமலிருக்கவேண்டும்.

நூற்போர் சங்கத்தால் குறிப்பிடப்பட்ட விலைக்குக் குறைத்து எவரும் விற்கக் கூடாதென்றும், தீர்மானிக்கப்படுகிறது. அந்த விலையின்மீது கமிஷன்கள் அளித்தலும் கூடாது.

இது விஷயத்தில் அகில இந்திய நூற்போர் சங்கத்தார் தமிழ்நாட்டுடன் ஒத்துழைத்து தமிழ்நாட்டுக் கதரின் தரம் குன்றாமலிருக்குமாறு அகில இந்திய விலையையும், உற்பத்தியையும் கட்டுப்படுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## தமிழ் நாட்டில் கதர்.

காஞ்சிபுரத்தில் சென்ற மாதம், ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் அக்ரானத்தின்கீழ் தமிழ்நாடு கதர்போர்டு மீட்டிங்கு நடைபெற்றதில், பாட்னா தீர்மானத்தின்படி தமிழ்நாடு கதர் போர்டைக் கலைத்துவிடவும், கதர் போர்டு சொத்துக்கள் யாவையும், அகில இந்திய நூற்பவர் சங்கத்தாரிடம் ஒப்படைத்து விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், கதர் ஸ்தாபனக் காரியதரிசியாக தமிழ்நாடு கதர் போர்டிற்கு, ஸ்ரீமான். எஸ். இராமநாதனை அகில இந்திய நூற்பவர் சங்கத்தாரால் நியமிக்கப்பட்டது. மற்றும்,

1925-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தோடு முடிவான ஒரு வருஷத்திலும், அதற்கு முந்திய அதே காலத்திலும் தமிழ்நாட்டில் கதர் உற்பத்தி விவரம் பின் வருமாறு:—

கதர் போர்டார் நேராக உற்பத்தி செய்தது.

| 1924–25 | 1923–24 |
|---|---|
| ரூ. 3,96,962, | ரூ. 2,90,148 |

மற்றும் கதர் போர்டின் உதவி பெற்றவர்களும், பெறாதவர்களும் உற்பத்தி செய்தது.

| 1924–25, | 1923–24 |
|---|---|
| ரூ. 3,08,826, | ரூ. 1,82,216 |
| மொத்தம் | |
| ரூ.7,05,788 | ரூ. 4,72,364. |

1924–25-ல் சில்லரை விற்பனை மட்டும், ரூ. 4,45,324–க்கு ஆயிற்று. மற்ற மகாணங்களுக்கு அனுப்பப்பட்டதையும் சேர்த்து மொத்தம் ரூ. 8,32,846 பெறுமான கதர் விற்பனை செய்யப்பட்டது. சென்ற வருஷத்தில் மொத்தம் ரூ.3,65,858 பெறுமான கதர்தான் விற்கப்பட்டது. இவற்றிலிருந்து கதர் உற்பத்தியும், விற்பனையும் பெருகியிருப்பது விளங்கும்.

## காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்.

இது பொழுது பொதுவாக இந்திய தேசத்தில் சிறப்பாக தென்னிந்தியாவில் பிராமணர்—பிராமணரல்லாதார் பிணக்கு இருந்து வருகிறதென்பதை ஒளிப்பதில் பிரயோஜனமில்லை. சாதாரண காலங்களில் மறந்தாலும் பெரிய கூட்டங்கள் கூடும் போது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகிறது. சமீபத்தில் காஞ்சியில் கூடிய ஸ்ரீனிவாசய்யங்கார்மகாநாட்டில் நடந்த விவரங்கள் இன்னும் தெளிவாகத் தெரியக்கூடும். முதல் நாள் இரவு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயமாய்க் கூடிய பிராமணரல்லாதார் மகாநாட்டில் பிராமணரல்லாதார் என்று சொல்லப்படுவோர் சிலர் சூத்திரக்கயிற்றின் விசையால் ஆடியதும் மறுநாள்காலை ஜவுளிக்கடைச்சத்திரத்தில் கூடிய கட்டிடத்தில் பாடியதும் பிராமணரல்லாதார்களுடைய ஆழத்தை அளந்துவிடவில்லையா? ஒருஇரவில்மாறியாடியது எந்தசொக்குப்பொடி? ஆனால் ஸ்ரீ.நாயக்கருக்கு வகுப்புவாரி தீர்மானத்திற்குஅனுமதி கொடுக்க 25 பேர் கையெழுத்து வேணுமென்ற அக்கிராசனர், கையெழுத்து வாங்கியனுப்பிய சில நிமிஷத்திற்குள்ளேயே அப்போதைய நிலைமை வேறு;இப்போதைய நிலைமை வேறு, ஆகையால் தீர்மானத்திற்கு அனுமதிகொடுக்க மாட்டேன் என்று நிராகரித்திருக்கும்போது ஒரு இரவெல்லாம்கழிந்தபின்பு மாறுவது பெரிதா? மகாநாடு இருந்தநிலைமையில் அவசியம் அத்தீர்மானம் நிறைவேறிவிடும் என்று பயந்தே சூட்சிசெய்யப்பட்டது என்பது பலருடைய அபிப்பிராயம். அத்தீர்மானம் மகாநாட்டில் விளக்கியிருக்கும் பட்சத்தில் பலருடைய சந்தேகம் வேறுபட்டிருக்கும். போகட்டும், பிராமணரல்லாத சகோதரர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். உங்களை பிராமண நண்பர்கள் போற்றவும், ஏற்றவும் பன்மையாகப் பேசவும், சரியாக உட்காரும்படி சொல்லவும், எல்லா ஸ்தாபனங்களுக்கும் பிராமணரல்லாதாரையே நிறுத்துவோம் என்று வாயிலாவது மேடைகளில் பேசவும், தீண்டாமை சாஸ்திரத்திலில்லை, சிறுகச் சிறுகவாவது ஒழித்து விடலாம் என்று சொல்லவும், சூத்திரப்பயல் என்று அவர்களுக்குள் பேசிக்கொண்டாலும், வெளியில் அப்படிப்பேச அஞ்சுவதும், உத்தியோகங்கள் பிராமணரல்லாதாரே கொண்டுபோகிறார்கள் என்று ஒரு வதந்தியுண்டாயிருப்பதும் எதனால்? பிராமணரல்லாதாரின் பூஜ்யராகிய டாக்டர் நாயர் சர். தியாகராயர் அவர்களால் கண்ட நீதிக்கட்சியாலல்லவா? அக்கட்சியைத் தூற்றுவது நன்றிகெட்ட செயலல்லவா?

"எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா
முய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

என்றார் தெய்வப்புலவர்; இதைச் சிறிது சிந்திப்பீர்களாக. ஆனால் அக்கட்சி தோன்றிய காலத்தில் பிராமணரல்லாதார் முன்னேற்றமே கட்சிமயாயிருந்தது. இப்போது வர வர சில தலைவர்கள் தங்கள் சுயநலத்தையும் நுழைத்துவிட்டபடியால், சிறிது மாசுபட்டிருக்கிறது. சுயநலம் எங்கில்லை? பார்த்த விடமெங்குமொரு நீக்கமற நிறைந்திருப்பது தானே;பட்டம் பதவி ஆசையாருக்கில்லை? ஞானிகளில்கூட சிலர் கிடைத்தால் ஒருகை பார்த்தேவிடுவார்கள். உதாரணமாக இம்மாதம் காஞ்சியில் கூடிய மகாநாட்டுத்தலைவர் சிறந்த படிப்பாளி, தேசபக்தர், காந்தியடிகளின் சிஷ்யர், சாதுகூட்டத்தைச் சேர்ந்தவர், பதவி பட்டம் இவைகளை வெறுப்பதாகச் சொல்கிறவர், எழுதுகிறவர், பெண் மக்களைத் தெய்வமாகப் பாவிக்கிறவர், அப்பெரியார் அக்கிராசன ஸ்தானத்தில் சர்வாதிகாரமும் செய்து விடவில்லையா? ஒரு உயர் பதவி அடைந்தவுடன் அதற்குள்ள யாவும் வேண்டியிருக்கிறது. அதனால் தான் தெரிந்தவர்கள் எதற்கும் முன்னுக்கும் போவதில்லை; அடக்கமாயிருக்கிறவர்கள், இப்படி அடிக்கடி பதவிகளில் பிரவர்த்திக்கும் போது அதுவே ஒரு ஆசையாக வந்து விடுகிறது. அந்தஸ்தை அடைந்தபின் மனதை அடக்குவது எல்லாராலும் சாத்தியப்படாது.' அது மகாத்மா காந்தியடிகளுக்குத்தான் சாத்தியப்படும். ஆகையால், சுயநலக்காரர்களும் பதவி பட்டம் வேட்டைக்காரர்களுமிருக்கலாம். அதற்காகக் கட்சியே கெட்டதென்று சொல்லிக்கொண்டு நீட்டின மரத்தில் கூர்மை பார்ப்பது பழைய சூத்திரப்பயலுக்கு அச்சாரம் வாங்குவதாகும். ஒவ்வொருவரும் பிராமணரல்லாதார் கட்சியில் சேர்ந்து யாரிடம் சுயநலமோ, வேற்றுமையோ இருக்கிறதோ அவர்களைத் திருத்த முயலவேண்டும். அப்படி வழிக்கு வராவிட்டால், விரட்டியடிக்க வேண்டும். அப்படிச்செய்யாமல் பிரமண நண்பர்களின் சுயநலத்தின் புன்முறுவலுக்காகக் கவுரவத்தை இழப்பது மடத்தனமாகும். பிராமணரல்லாத ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கு ஒரு வேண்டுகோள். உண்மையில் நீங்கள் பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்கு உழைப்பது மெய்யானால், இங்கு சற்று செவி சாய்க்கவேண்டும். அடுத்த வருஷம் சட்டசபைத் தேர்தல் நடக்கப்போகிறது. உயிர் நிலை கிராமங்களில் இருப்பதை யுணர்ந்து நமது பிராமண நண்பர்கள் காங்கிரசு என்னும் சுயராஜ்யக் கட்சி யென்றும் தங்கள் முன்னேற்றத்தை லக்ஷியமாய்க்கொண்டு பசுத்தோல் போர்த்தி பிரசாரத்திற்காகத் தமிழர்களையே பெரும்பாலும் ஏற்படுத்திக்கொண்டு கிளம்பப் போகிறார்கள். அப்படி அவர்கள் செய்ய உரிமையுண்டு. அதற்காக நாம் அவர்களை திட்டுவதோடே நமது கடமையை முடித்துவிட்டதாக நினையாமல், அடுத்த பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் உருவான தீர்மானங்களைச்செய்து கிராமங்களில் பிரசாரம் செய்து ஆங்காங்கு பார்ப்பனரல்லாதார் சபையை ஏற்படுத்தி காந்தியடிகளின் தற்கால திட்டமாகிய, நூற்போர் சங்கம், கத்தர், தீண்டாமை இதுகளையும் கைக்கொண்டு பிரசாரம் செய்யும் பட்சத்தில் அவசியம் வெற்றி உங்களுக்கு நிச்சயம். கிராம ஜனங்கள் உங்களைவிட உணர்ச்சியில் குறைந்தவர்களல்ல. சாமான்யமாய் அவர்களை ஏமாற்ற முடியாது. இந்த உண்மை வழிக்கு காங்கிரஸ் தலைவர்களாகிய ஸ்ரீமான்கள். ராமசாமி நாயக்கர், ராமனாதன், ஆரியா, சர்க்கரைச் செட்டியார் முதலியவர்கள் கூட்டுறவு மிகவும் முக்கியமாய் வேண்டும். அவர்களும் இதை அவசியமாய் ஒப்புக்கொண்டே தீர்வார்கள். கடவுள் எல்லாருக்கும் அவரவர்கள் உழைப்புப்படி உதவி செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார். உடனே கிராமங்களை நோக்குங்கள்; எழுங்கள். இதைச் செய்ய நீங்கள் அலட்சியம் செய்வீர்களேயானால் கட்டாயம் சென்னை நகரசபைக் கோட்டையை விட்டதுபோல் இன்னொரு கோட்டையையும் விடவேண்டியிருக்கும். நல்லசமயம் காற்றுள்ளபோதே தூற்றுங்கள். பார்த்தவிடமெல்லாம் பிளவுபட்டுக் கிடக்கிறது, உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? சமயத்தை விடாதீர்கள். உங்கள் பிரசாரத்தின் பலனைத் திராவிடன் பத்திரிகைக்கு எத்தனை பேர் கிராமத்தில் சந்தாதாரர்கள் என்பது பின்னால் கணக்கிடப்படும்.

திருப்பதி.

## சுகோதயம் பத்திரிக்கை.

சுகோதயம் என்னும் தமிழ் வாராந்தரப் பத்திரிகை ஆரணியிலிருந்து ஸ்ரீமான். வி. என் ரெங்கசாமி ஐயங்காரவர்களை ஆசிரியராகக்கொண்டு சுமார் நான்கு வருடக் காலமாக தமிழ் நாட்டில் உலவி வருவது தமிழ் மக்கள் அறிந்த விஷயம். அப்பத்திரிக்கையின் ஆசிரியர் யாதொரு ஊதியமும் இல்லாமல் கௌரவ ஆசிரியராய் இருந்துகொண்டு குறைந்த சந்தாவாகிய வருடம் ரூ. 2-8-0 வீதம் ஏழைகளும் படிக்கும்படியான கவலையின்பேரில், எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் நடத்தி வந்திருப்பதைத் தமிழ் மக்கள் பாராட்டாமலிருக்க முடியாது: அதனுடைய ராஜீய கொள்கைகள் தமிழ் நாட்டிலுள்ள மற்ற பெரும்பான்மையான பத்திரிக்கைகள் போல் காற்றடித்த பக்கம் சாயாமல் ஒரே உறுதியாகவே இருந்துவந்தது மற்றுமோர் பாராட்டத்தக்க விஷயம்.

வகுப்பு விஷயங்களில் ஒருக்கால் நமக்கும், அதற்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருந்தபோதிலும், ராஜீய விஷயங்களில் பெரும்பாலும் மகாத்மாவையும், சில சமயங்களில் தீவிர ஒத்துழையாதத்துவத்தையுமே அனுசரித்து வந்திருக்கிறது. அவ்விதப் பத்திரிக்கை இது சமயம் சென்னை பிரசிடென்ஸி மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு ஒரு வழக்கில் இழுக்கப்பட்டு பத்திராதிபர்களின் உரிமைக்கும், சுயமரியாதைக்கும் பங்கம் வரத்தக்க மாதிரியில் கஷ்டப்படுத்தப்பட்டு வருகிறது. இது சமயம் பொறுப்புள்ள பத்திராதிபர்களும், பத்திரிக்கையின் சுதந்தரத்தில் கவலையுள்ளவர்களும் முன்வந்து, ஷை பத்திரிகைக்கு ஆதரவு அளிக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையென்பதை நாம்வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். சுகோதயம் பாதுகாப்பு நிதிக்காக நம்மால் கூடிய ஓர் சிறு தொகையாகிய ரூ. 10 இன்று அனுப்பியிருக்கிறதை, ஷை பத்திராதிபர் அன்புடன் ஏற்றுக் கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம். சுகோதயம் பத்திரிகைக்கு வெற்றி உண்டாகுக.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.


தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கதர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.



## உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்

## ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரகைஷயும்."
குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்கு விபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புஸ்தகமும் கிடைக்கும்.

## இலங்கை நாட்டுக்கு நமது ஏஜண்டு.

இலங்கை நாட்டுக்கு நமது "குடிஅரசு"ப் பத்திரிக்கையின் ஏஜண்டாக இருக்க கொழும்பு செட்டித்தெரு, 45-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள சுத்தக் கத்தர் ஜவுளி நிலையம், ஸ்ரீமான். பெ.பெரி. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களைக் கேட்டுக்கொண்டதின் மேல் அவரும் சம்மதித்ததால் அவரை நியமித்திருக்கிறோம். நமது பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்கள் ஷையாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்.

இனும்! இனும்!!

நூறு வருஷத்திய காலண்டரும், புஸ்தக சமாச்சாரங்களடங்கிய பத்திரிகையும் தபால் செலவின்றி அனுப்புவோம்.

ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் (P. O) சென்னை.

## "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்,
"தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி. ரங்கூன்.

## "தேசபக்தன்"

ஓர் தேசியத்தமிழ் பத்திரிகை.
பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பாத்திற் கேற்றது.
வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.
பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2-0-0
ஏனையோர்க்கட்கு வருட சந்தா ரூ. 1-8-0

காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

## நவ இந்தியா.

தேசமுன்னேற்றத்துக்கென உழைக்கும் ஓர் வாரப்பத்திரிகை.
ஆசிரியர்.
ஸ்ரீமான். டி. எஸ். தியாகராஜ ஞானியார்.
வருட சந்தா ரூ. 5.

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை காஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரையஜாப்தாவுக்கு எழுதுங்கள்

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## விசேஷ அறிவிப்பு.

நமது "குடிஅரசு" பத்திரிக்கையை தென் இந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள மெஸர்ஸ் ஹிக்கின் பாதம்ஸ் கம்பெனியார்களின் புத்தகசாலைகளில், விற்பனைசெய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

☞ தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

விலை அணா ஒன்று

மானேஜர்.


## டைமண்ட் பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்கிலீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரோப்ரைட்டர்.


ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.